அமைச்சர் செ.மாதவன் எழுதிய

# ஏன் வேண்டும்



# மாநில சுயாட்சி?

# ஏன் வேண்டும் மாநில சுயாட்சி?

மாண்புமிகு தொழில், சட்ட அமைச்சர்

செ. மாதவன் பி. காம்., பி. எல்.,

வைகை வெளியீடு

23, மூக்கபிள்ளை தெரு, : : தல்லாகுளம், மதுரை-2

பிப்ரவரி வெளியீடு
உரிமை: ஆசிரியருக்கே.

விலை 1-25

அச்சிட்டோர்:
சந்திரா பிரிண்டர்ஸ்,
மதுரை:-'72

# ஐயம் அகற்று!

தமிழக அரசுச் சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்கள், அறிவும், தெளிவும் மிக்க சிந்தனையாளர். மாநில சுயாட்சி பற்றி அரசியல் வாதிகளும் பொது மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இந் நூலைப் படைத்துத் தந் துள்ளார். தமிழ் மக்கள் அனைவரும் இந் நூலைப் படித்து ஐயம் அகற்றிக் கொள்வார் களெனப் பெரிதும் நம்புகிறோம்.

— வெளியீட்டார்.

"உறவுக்குக் கை கொடுப்போம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம்"

— டாக்டர் கலைஞர்

# ஏன் வேண்டும் மாநில சுயாட்சி?

அண்மைக் காலத்தில் இந்திய பூபாகத்தில் மாநில சுயாட்சித் தத்துவம் பெரிதும் பேசப்படுகின்றது.

பாகிஸ்தான் நாட்டின் ஒரு பகுதியாகிய கிழக்கு வங்காளமக்களின் உரிமைப்போராட்டம் உலகசரித் திரத்தில் இடம்பெற்று விட்டது. வங்கமொழி, பண் பாடு, பொருளாதார வளர்ச்சி இவைகளின் அடிப்ப டையில் உரிமை வேட்கை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. பாகிஸ்தான் நாட்டின் முழுமுதல் இறையாண்மையை ஏற்று, அதன் கீழ் தன்னுட்சி உரிமை பெற்ற மாநிலசுயாட்சி கோரித்தான் கிழக்கு வங்க மக்கள் உரிமைக்குரல் முதலில் எழுப் பத்தொடங்கினர்.

மொழி, பண்பாடு, கலாச்சாரம் இவைகளில் வேறு பட்ட மக்களை மதத்தின் அடிப்படையில் ஒன்று சேர்க்க முடியும் என்ற தத்துவம் தோற்றுவிட்ட தைக் காண்கின்றோம். ஆட்சியாளர், உரிமை உணர் வுகளை மதிக்க மறுத்தனர். ஏகபோக ஆதிக்க உணர்ச்சிதான் ஆட்சியாளரிடமிருந்து வெளிப் பட்டது.

## ஆரம்பப்பாடம்

உரிமைகளை அடைய ஜனநாயக முறைகளை வன்முறையற்ற வழியில் நின்று பின்பற்ற வேண்டும் என்று நல்லுரை பகர்வது சரித்திரத்தில் நாம் காணும் அரசியல் ஆரம்பப் பாடமாகும்.

கிழக்கு வங்க மக்கள் இந்த உபதேசத்தை நம்பிப் பல்லாண்டுகளாக மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தார்கள். இறுதியில் ஜனநாயக முறையில் நடந்தேறிய பொதுத் தேர்தலில் பெரும்பான்மை வெற்றியினைச் சிறப்பான முறையில் பெற்றனர். ஆனால் ஆதிக்க உணர்ச்சியுள்ள ஆட்சியாளர்கள் மக்கள் தீர்ப்பை மதிக்க மறுத்தனர். ஜனநாயக மரபுகளைப் பின்பற்ற வேண்டும் வன்முறை தவிர்க்கப் படவேண்டும் என்று பரிந்துரைப்போர், ஆதிக்கக்காரர்களின் அடக்குமுறை ஆட்சிபற்றி அறிவதற்குக் கிழக்குவங்கம் ஓர் உதாரணமாக அமைந்துள்ளது

## விடுதலை வேட்கை

இதன் விளைவாக மாநில சுயாட்சிக் கோரிக்கை மாறி, ஏகபோக ஆதிக்கக்காரர்களின் பிடிப்பிலிருந்து விடுதலைபெற வேண்டும் என்ற விடுதலை வேட்கை ஒலி கிழக்கு வங்க மக்களின் இதயங்களிலே சிந்துபாடத் தொடங்கியது; ஜனநாயகம் மறைந்தது.

காட்டாட்சி தர்பார் கட்டவிழ்த்து விடப்பட்டது. விடுதலைவீரர் கூட்டம் ஏகாதிபத்திய அடக்குமுறை

ஆட்சியை எதிர்த்துப் போராட்டம் நடத்தும் காட்சி, உரிமை முழக்கமிட்டோர் பிணங்களாகி மலைபோல் குவியும் உள்ளமுருக்கும் நிகழ்ச்சிகள், இவை நாள் தோறும் கிழக்கு வங்கத்திலிருந்து வரும் துயரமிகும் செய்திகள்.

## ரகிமான்

மொழி, பண்பாடு இவற்றைப் பேணிக்காத்திடல் வேண்டும். பொருளாதார ஆதிக்கம் தகர்த்தெறியப் படவேண்டும் எனப் போர்முழக்கமிட்டுக் கிழக்குவங்க மக்களைப் பாகிஸ்தான் ஆதிக்க ஆட்சியாளர்க்கு எதிராக ஆறு அம்சத்திட்டத்தின் அடிப்படையில் கிளர்ந்தெழுந்து ஒன்றுபடச் செய்து விடுதலைப்படையின் தனிப்பெருந்தலைவராக வரலாற்றுப் புகழ் பெற்றவராக திரு. **முஜிபுர் ரகிமான்** திகழ்வதைக் காண்கின்றோம்.

விடுதலை என்ற விளக்கினை ஆதிக்கக்காரர்கள் அணைக்கமுற்பட்டால், அது காட்டுத்தீயாக வேகமாகப்பரவும் என்ற சரித்திர உண்மையினை வங்கத்தில் காண்கின்றோம். மாநில சுயாட்சிக் கோரிக்கை வங்காளதேசத்தின் விடுதலைப் போராட்டமாக மலர்ந்திருப்பதைக் காண்கின்றோம்.

## அண்ணாவின் விருப்பம்

இந்திய பூபாகத்தின் ஒரு பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகள் நம்முடைய உள்ளத்தில் உணர்ச்சிகளை ஊட்டுகின்றன. சிந்தனையைத் தூண்டுகின்றன.

மாநில சுயாட்சித் தத்துவத்தை தனது இறுதி விருப்பாக தமிழினத்தின் உரிமை சாசனமாக அளித்துச்சென்ற பேரறிஞர் அண்ணாவின் புனித நினைவுகள் நிழலாடுகின்றன.

மொழி, பண்பாடு, கலாச்சாரம், வரலாற்று அடிப்படையில் திராவிடநாடு தனி நாடாக அமைத்திட வேண்டும் எனும் மூலக்கொள்கையை அண்ணா அவர்கள் உருவாக்கியது உண்மை தான். ஆனால் பின்னர், உலகநாடுகள் அரசியல் தொடர்புகள், இந்தியத் துணைக்கண்டத்தின் பாதுகாப்பு இவைகளைக் கருத்தில் கொண்டு தன்னாட்சி உரிமைகொண்ட மாநில சுயாட்சித் தத்துவத்தை அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். தனிநாடு கோரிக்கை முழுமையாகக் கைவிடப்பட்டது.

தனிநாடு கோரியதற்கான காரணங்களின் அடிப்படையில் தான் மாநில சுயாட்சிக் கோரிக்கை மலர்ந்தது. இதுவே தி. மு. கழகத்தின் மூலக் கொள்கையாக விளங்குகின்றது. வெறும் அரசுக்கட்டிலின் அதிகார அந்தஸ்துக்களில் மூழ்கி விடாமல் தனது மூலக்கொள்கையை வழியுறுத்துவதில் தி. மு. கழகம் சிறிதும் பின்வாங்கியதில்லை.

## மாயை

தி. மு. கழகத்தின் மாநில சுயாட்சிக் கொள்கையை நல்ல முறையில் உணர்ந்து சிந்தித்து முடிவு காணவேண்டுமானால் முன்னைய தனித்

திராவிடநாடு கோரிக்கையை முற்றிலும் கைவிட்டு விட்டோம் என ஏற்றுக்கொண்டு விவாத அரங்கில் இறங்கிவிட வேண்டும். பிரிவினை உணர்வு பின்னணி யாக இருக்கின்றது என்ற மாயையான எண்ணம் மறைந்திடல் வேண்டும்.

பாகிஸ்தான் நாட்டிற்குள் எழுந்த உரிமைக் கிளர்ச்சியை உற்சாகத்துடன் வரவேற்று இறுதி யில் கிழக்கு வங்கம தனி நாடாக மலர வேண்டும் என்று ஆதரவு அளிக்கும் இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் விற்பன்னர்கள் இப்போதா வது தங்கள் மாயத்திரையிலிருந்து வெளிவந்து மாநில சுயாட்சிக் கொள்கையின் உண்மையினை உணர்ந்திட முன்வர வேண்டும்.

"பிரிவினைவாதிகள்" என்று பட்டம் சூட்டிவிட்டு, பிரச்சினையின் தன்மையை ஆராயாது விடுவது, மறைமுகமாக விடுதலை வேட்கையினை தூண்டுவ தாகிவிடும். கிழக்கு வங்கத்தின் படிப்பினையை உணர்ந்த பின்னராவது காழ்ப்பு கசப்புணர்ச்சி களுக்கு இடம் கொடாது ஒருசார்பு நின்று கருத் துக்களைத் தராது நேரிய சிந்தனைக்கு இடம் தந்து, இந்திய நாட்டின் ஒற்றுமை நிலைத்து நிற்க மாநில சுயாட்சிபற்றி சிந்தித்து முடிவு எடுக்கவேண்டியது அவசரத் தேவையாகும்.

இந்திய நாடு முழுதும் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும், இனிய வளமான வாழ்வை இந்திய மக்கள் பெறவேண்டும், இந்திய நாடு பகை

வருக்கு அஞ்சாது பாதுகாப்பு மிக்க நாடாக விளங்க வேண்டும் – இவை அனைவரும் ஏற்றுக்கொள்ளத் தக்க கருத்துக்கள்; இந்த நோக்கங்களை எய்து வதற்கு எத்தகைய அரசியல் அமைப்பு நமக்குத் தேவை என்பதுதான் இன்று நம் முன்னுள்ள பிரச்சினையாகும்.

## ஒரே நாடா ?

இந்தியா ஒரு நாடல்ல; மொழி, பண்பாடு, கலாச் சார வேறுபாடுகள் நிறைந்த பல்வேறு இனமக்கள் வாழும் ஒரு துணைக் கண்டம். வடபுலத்தவர்களின் ஆதிக்கம் மத்திய அரசின்மூலம் தமிழ்மொழி, பண் பாடு, கலாச்சாரம் இவை அழிவதற்கு வழி வகுத்து விடும். இந்தியா ஒரே நாடாகச் செயல்படுவதென்பது இயற்கை நிலைக்கு முரணானதாகும். மொழி ஆதிக்கத் தாலும் கலாச்சாரக் கலப்பாலும் தமிழினம் பல்வேறு இனங்களாகப் பிரிந்தது. அதன்மொழி சிதைந்தது. பண்டைய நாகரிகத்தையும் பண்பாட்டையும் அது மறந்தது. தன்மானமிக்க தமிழன் தனிநாடு உரிமை பெற்ற ஆட்சி பெற்றால்தான் உயர்வடைய முடியும். இவ்வாறு தி. மு. கழகம் திட்டம் தீட்டிச் செயல் பட்டது உண்மைதான். ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே கொள்கை மாற்றம் அறி விக்கப்பட்டது.

உலகநாடுகள் கொண்டுள்ள நெருங்கிய அரசி யல் தொடர்பு, இந்திய நாட்டின் இன்றியமையாத

பாதுகாப்பு இவைகளைக் கருத்தில் கொண்டு இன்றைய உலகில் தனிநாடு கோரிக்கை முற்றிலும் தேவையற்றது. இந்திய அரசியலமைப்புக்குள் தமிழ் இன, மொழி, பண்பாடு பேணிக்காத்திட பொருளாதார ஆதிக்கப் பிடிப்பில்லாமல் முன்னேற்றம் கண்டிட உண்மையான கூட்டாட்சித்தத்துவத்தின் அடிப்படையில் தன்னுட்சி உரிமையுள்ள மாநில சுயாட்சி பெறுவது என்ற முடிவைத் தி. மு. கழகம் எடுத்தது. இந்த உண்மையான கொள்கை மாற்றத்தை வடபுலத்தவர், மத்திய ஆட்சியினர், ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## வடநாட்டார் எண்ணம்

வடபுலத்தவரிடம் ஒரு எண்ணம் வளர்ந்துள்ளது. "இந்திய நாடு ஒரே இனம், ஒரே மொழி, ஒரே பண்பாடு என்ற ஒருமைப்பாட்டின் அடிப்படையில் உருவாகிடல் வேண்டும். இனம், மொழி, பண்பாடு இந்த வேற்றுமைகள் நீடிப்பது ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தாகும். இந்தி மொழி ஆதிக்கம், எல்லா மொழிகளுக்கும் ஒரே எழுத்து வடிவம் வேண்டும்" – இத்தகைய உணர்வுகள் வடபுலத்தில் வளர்க்கப்பட்டு வருவது மறுக்கமுடியாததாகும்

இந்தியாவின் "ஒற்றுமை" க்கும், "ஒருமை" க்கும் வேறுபாடு உணராது ஆதிக்க உணர்வுகள் வளர்வது உண்மை. மத்திய அரசின் பொருளாதார ஆதிக்கத்தால் இத்தகைய உணர்வுகளைச் செயல்படுத்த முயல்வதும் உண்மை.

இந்த எண்ணங்களில் வட புலத்தவரின் மன மாற்றம் மிகுதியும் தேவை. பல்வேறு இன, மொழி, பண்பாடுகள் உள்ள மக்கள் கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில்தான் வாழமுடியும் என்ற உண்மையை வட புலத்தவர் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ள வேண்டும். மாநிலங்களிடையே உரிமைகளை மதித்து உறவுகளை வளர்த்து இந்திய ஒற்றுமையை உருவாக்கிடல் வேண்டும். இந்தக் கருத்துக்கள்—தனிநாடு தேவை இல்லை, ஒருமைப் பாடு என்ற பெயரால் ஆதிக்க உணர்வு வளர்த்தல் கூடாது என்ற கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப் படுமானால் மாநில சுயாட்சி பற்றி முடிவுகள் எடுத்தல் மிகவும் எளிதாகும்.

## புதிய முழக்கமா?

மாநில சுயாட்சி இந்திய நாட்டு வரலாற்றில் புதிய முழக்கமல்ல. விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு கட்டங்களில் எழுப்பப்பட்டிருக்கின்றது. ஏன், மாநில சுயாட்சித் தத்துவம் ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தால் பாகிஸ்தான் தனிநாடாகப் பிரிந்திருக் காது என வாதித்தவரும் இருந்தனர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தனிப் பெருந்தலைவராக விளங்கிய பண்டித **ஜவகர்லால் நேரு.** "பிரிந்து போகும் உரிமையுள்ள தன்னாட்சி உரிமைபெற்ற மாநிலங்களடங்கிய இந்திய அரசிய லமைப்புவேண்டும்" என்று முழக்கமிட்டதும் நினைவு கூறத்தக்கது.

ஆனால் சுதந்திரப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் சாதி மதச் சண்டைகளால், இனமொழிப் போராட்டங்களால் அந்நியர்களின் ஆதிக்கம் மேலோங்கிய நாட்டின் பண்டைய வரலாறு "ஏக இந்தியா" என்ற புதிய கொள்கைக்கு வலிவு தந்தது. சுதந்திரப் போராட்டத்தின் கடைசி அத்தியாயங்கள் இதை உணர்த்தும். இதன் விளைவாகத் தன்னாட்சி உரிமை பெற்ற மாநிலங்களைக் கொண்ட இந்தியா என்ற நிலைமாறி "ஏக இந்தியா" என்ற வடிவம் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்று விட்டது.

## அரசமைப்பு

உலக நாடுகளில் பல்வேறு அரசமைப்புச்சட்டங்களைக் காண்கின்றோம். பிரிந்து போகும் உரிமையுள்ள கூட்டாட்சித்தத்துவம் அடங்கிய கூட்டுக் குழு அரசமைப்பு, தன்னாட்சி உரிமைபெற்ற கூட்டாட்சி அரசமைப்பு போன்று உள்ளன.

இந்திய அரசமைப்புச் சட்டம் தனித்தன்மை வாய்ந்தது. அமெரிக்க நாட்டு அரசமைப்புச் சட்டத்தின் பகுதிகளையும், பிரிட்டன் நாட்டு எழுதப்படாத அரசமைப்புச் சட்டத்தின் தன்மைகளையும் இணைத்து அது உருவாக்கப்பட்டது. "கூட்டாட்சி அரசமைப்பு" என்று தொடங்கி "அரைகுறைக் கூட்டாட்சி" அமைப்பாக உருவாகி இறுதியில் ஒருமை அரசமைப்பாக ஏக இந்தியாவுக்கு வழி

வகுத்து விட்டது - என நமது அரசமைப்புச் சட்டம் பற்றிச் சட்ட வல்லுனர்கள் விவரித்துள்ளனர்.

இன்றைய இந்திய அரசமைப்புச் சட்டப்படி, மாநில அரசாங்கக் காரியங்களில் மத்திய அரசாங்கம் தலையிடுவதற்கு உள்ள அதிகாரத்தால் கூட்டாட்சிக் கொள்கையே மாறிவிட்டது என்று அரசியல் நூலறிஞர் "வீயர்" என்பவர் கூறுகின்றார்.

இந்த வரலாற்றுப் பின்னணியை வைத்து நமது அரசமைப்புச் சட்டத்தைப் பரிசீலிப்போமானால் மாநிலங்கள் உரிமைகள்பெற அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் தேவை என்போரின் வாதங்களின் வலிவை உணர முடியும்.

## ஆட்சி மொழி

மத்திய அரசின் ஆட்சிமொழிபற்றிமுடிவில்லாது விவாதம் தொடர்கின்றது. திறந்த மனத்தோடு, ஆதிக்கம் செலுத்தும் எண்ணம் இல்லாது, இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகள் எடுக்கப்படவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டப்படி இந்திமொழி மத்திய அரசின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. இதற்கு தி.மு. கழகம் பலமான எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவித்து வந்துள்ளது.

ஆட்சிமொழிப் பிரச்சினையையும் கல்விக்கூடங்களில் பயிலும் மொழிகள் பற்றிய பிரச்சினையையும் ஒன்றாக இணைத்து மொழிப் பிரச்சினை என்ற பெயரால் சூடான விவாதங்கள் நடைபெறுகின்றன.

இவை முற்றிலும் வேறுபட்ட பிரச்சினைகள் என்பதை எண்ணிச் சிந்தித்திடல் வேண்டும்.

அரசமைப்புச் சட்டத்தில் ஆட்சிமொழிபற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்திமொழிமட்டும் தான் மத்திய அரசின் ஆட்சிமொழி - அதுவும் "தேவநாகரி" எழுத்து வடிவத்தில் என்று திட்ட வட்டமாகத் தீட்டப்பட்டுள்ளது வேறுமொழிக் காரர்களின் எதிர்ப்பைச் சமாளிக்கவும், இந்திமொழி வளர்ச்சிக்குக் காலம் எடுத்திடவும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்த வழிவகுக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின் கீழ்தான் மொழிப் போராட்டங்கள் தொடங்கப்படும்போதெல்லாம் "இந்தித் திணிப்பு இல்லை, ஆங்கிலம் தொடர்கின்றது" என்ற போலிச் சமாதானம் கூறி இடைக்காலமாகப் பரிகாரம் காணப்படுகின்றது. ஆனால், அரசமைப்புச் சட்டப்படி இந்தியா முழுவதும் மத்திய அரசின் நிர்வாகத் திற்கு இந்திமொழிதான் என்பது நிலைநிறுத்தப் பட்டுள்ளது. ஆகவேதான், தி. மு. கழகம் அரசமைப் புச்சட்டம் திருத்தப்பட வேண்டும்- இந்தி ஆட்சி மொழி என்பதை மாற்றிடல் வேண்டும் எனப் போராடி வருகின்றது.

## மொழிப்பிரச்சினை தீரும்

மாநில சுயாட்சித்தத்துவம் ஏற்றுக்கொள்ளப் பட்டால் ஆட்சி மொழிப் பிரச்சினை எளிதாகத் தீர்க்கப்பட முடியும். மாநிலங்களில் வட்டார மொழி களே ஆட்சிமொழிகளாகப் பயன்படுத்தப்படுகின் றன. இதில் கருத்து வேற்றுமை இல்லை எனலாம்.

மத்திய அரசின் அதிகார எல்லைகள் குறையக் குறைய, ஆட்சி மொழிப் பிரச்சினையும் குறைகின்றது. இன்று மக்களின் பெரும்பான்மையான பிரச்சினைகளில் மத்திய அரசின் பங்கோ குறுக்கீடோ உள்ளது. இந்நிலைமாறினால் மொழிப்பிரச்சினையின் தன்மையும், வேகமும் குறைய வாய்ப்புள்ளது.

தன்னாட்சி உரிமைபெற்ற மாநிலங்கள் அமைந்த பின்னர் மத்திய அரசின் அதிகார எல்லைகள் வெகுவாகக் குறைந்து மத்திய அரசின் பணிகளுக்கு இந்தி, ஆங்கில மொழிகளைப் பயன்படுத்துவதில் மிகுந்த அளவுக்குச் சிக்கல்கள் அகற்றப்பட்டுவிடும். மாநில எல்லைகளுக்குள் மாநில ஆட்சி மொழியையும் மாநிலங்களுக்கிடையேயும், மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கிடையேயும் இந்தி ஆங்கில மொழிகளையும் பயன்படுத்த சிக்கலற்ற வழிமுறைகளைக்காண்பது எளிதாகும். இவ்வகையில் மாநில சுயாட்சி, இந்திய ஒற்றுமைக்குப் பேராபத்தைத் தந்து வரும் ஆட்சிமொழிச் சிக்கலைத் தீர்த்து வைக்கின்றது.

## பாட மொழி

ஆட்சிமொழிப் பிரச்சினையோடு கல்விக்கூடங்களில் பயிலும் மொழிகள் பற்றிய பிரச்சினையையும் இணைத்துக் குழப்புகின்றனர்.

பயிலும் மொழிகள் பற்றி ஏதும் அரசமைப்புச் சட்டத்தில் கூறப்படவில்லை. இந்தி மொழியையோ

அல்லது வேறு எத்தனை மொழிகளேயாயினும் அவரவர் விருப்பத்திற்கேற்றபடி ஆற்றலுக்குட் பட்டுப் பயில்வது ஏற்கப்பட வேண்டிய கருத்தாகும். ஆனால் அரசியல் ஆட்சிமொழி இந்தி ஆட்சி இயந் திரத்தில் செயல்பட இந்தி கட்டாயம் தேவை என்ற இன்றைய நிலைதான், பயிலும் மொழிகளுக்கு எதிர்ப்பை உருவாக்குகின்றது.

பயிலும் மொழிகளுக்கு மும்மொழித்திட்டம் தரப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இந்தியநாடு முழுவதும் ஒரு மொழி தேவை. அது இந்தி மொழி எனச் சொல்லப்படுகின்றது. இம்மொழியை ஏற்கச் செய்வதற்காக தேசீய மொழி, ஆட்சி மொழி தொடர்பு மொழி எனப் பல்வேறு பெயர்களால் திணிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

மும்மொழித் திட்டத்தில் ஆங்கில மொழியை இந்திய நாடு முழுவதும் கற்கவேண்டும். இம் மொழி தொடர்புமொழியாக விளங்குகின்றது. பின் ஏன் இந்தி மொழி? இக்கேள்விக்குப் பதில் மும்மொழித்திட்டம் ஒரு மோசடித்திட்டம் என்பது தான். வடநாட்டவரின் உண்மையான நோக்கம் இறுதியில் இந்திய நாட்டில் இந்திதான்கோலோச்சி நிற்கவேண்டும் என்பதுதான். இந்த உண்மை, வடபுலத்தலைவர்கள் சில நேரங்களில் தங்களை அறியாமலேயே ஆங்கில மொழி வெகுவிரைவில் இந்த நாட்டைவிட்டு விரட்டப்பட வேண்டும் என்று பேசிவிடுவதிலிருந்து புலப்படும்.

ஆகவே, மொழிப்பிரச்சினையில் வடபுலத்தவர் பித்தலாட்டமான வாதங்களைக் கைவிட வேண்டும். இந்திய ஒற்றுமைக்கு இந்திமொழி தேவை எனும் பொய்மையான வாதத்தை மறந்திடல் வேண்டும். பல்வேறு மொழிகள் பேசுவோர் ஒற்றுமையாக வாழ்ந்திட முடியும் என்பதை ஏற்றிடல் வேண்டும். தாய்மொழியும், இந்திய அகிலத்தொடர்புக்கு ஆங்கிலமும் இணைந்த இருமொழித்திட்டம் தான் சிறந்த தீர்வழி என்ற உண்மையை உணர்ந்திடல் வேண்டும்.

கலை, கலாச்சாரம், வணிகத் தொடர்புகளால் தான் பன்னெடுங்காலங்களுக்குப்பின் எந்த மொழியும் இந்திய நாட்டில் வளர்ந்திடல் முடியும் சட்டத்தாலும், அதிகாரத்தாலும் மறைமுகத் திணிப்டாலும் இந்தி மொழியைத் தமிழக மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பது வரலாறு கூறப்போகும் உண்மை.

## ஒற்றுமை சிதையுமா?

மாநிலசுயாட்சி என்றால் என்ன? அதிகாரங்களை அதிகம் பெறுதலால் கிடைக்கும் நன்மைகள் யாவை? மாநில சுயாட்சி மத்திய அரசின் வலுவினைக் குறைத்துவிடும்-இந்திய ஒற்றுமையைச் சிதைத்துவிடும், இவைபோன்ற கருத்துக் குழப்பங்கள்தான் நாட்டிலே நடமாடுகின்றன.

இவைகளில் கருத்துத் தெளிவுவேண்டும். சந்தேக மனப்பான்மை அகன்றிட வேண்டும். பல்வேறு இன, மொழி, பண்பாடு, கலாச்சாரங்கள் நிறைந்த இந்திய நாடு அரசியல் பாதுகாப்புக்காக ஒரு நாடாக விளங்கிட முடியும் என்பதில் எள்ள ளவும் ஐயப்பாட்டிற்கு இடம் தரலாகாது. இதில் உள்ளத்தில் கரவில்லாது ஒருமித்த கருத்து ஏற்படுமானால் மேற்கண்ட கேள்விக்குப் பதில் காண்பது எளிது.

இந்திய யூனியன் என்று அரசமைப்புச் சட்டம் தொடங்குகின்றது. இதுவே அபசகுனத்திற்கு அறிகுறி. இந்தியக் கூட்டாட்சி என்று தொடங் கினால் பல பிரச்சனைகள் சுலபமாகத் தீர்க்கப்பட்டு விடும். "மத்திய மாநில அரசுகள் உயர்வு தாழ்வு இன்றி இணைந்து செயல்படும் வகையில் அதி காரங்கள் பகிரப்படுவதே கூட்டாட்சிக் கொள்கை" என்கிறார் வீயர் என்ற அரசியல் வல்லுநர்.

எனவே, மத்திய அரசின் தயவில் வாழும் மாநிலங்கள் என்ற நிலைமாறி, மாநிலங்கள் ஒன்று சேர்ந்து இயக்கும் மத்தியக் கூட்டாட்சி என்ற நிலை ஏற்கப்பட வேண்டும். ஏக இந்திய உணர்வு, ஒருமொழி ஆதிக்கம் இவை அடியோடு மறைந் திட வேண்டும். இத்தகைய எண்ணங்களின் அடிப்படையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தை மாற்றிட முயல்வோமானால், நமது நாட்டின் பல்வேறு பிரச்சனைகளை எளிதில் தீர்த்துவிட முடியும்.

## மாற்ற வேண்டும்!

இன்றைய அரசமைப்புச் சட்டம் "ஏக இந்தியா" என்ற உணர்வில் உருவாக்கப்பட்டது. இந்த அடிப்படை மாற்றப்பட வேண்டும்.

மத்திய அரசின் அதிகாரங்களடங்கிய "தனிப் பட்டியல்", மத்திய அரசு மேலதிகாரங்களைச் செலுத்த வாய்ப்புள்ள "கூட்டுப் பட்டியல்", மாநில அதிகாரங்களை வரையறுக்கும் பட்டியல், இந்த மாநில அதிகாரங்களையும் தன்வசப்படுத்த மத்திய அரசுக்குச் சில சிறப்பு அதிகாரங்கள், இம்மூன்று பட்டியல்களிலும் வராத எஞ்சிய அதிகாரங்கள் அத்தனையும் மத்திய அரசின் பிடியில் உள்ளன. இவைதான் அரசமைப்புச் சட்டத்தின் சுருக்கம்.

மாநில சுயாட்சிக் கொள்கை ஒப்புக்கொள்ளப் பட்டால், விவரங்களை விவாதித்து முடிவு காண்பது எளிதாகும். இந்த விவரங்களை மக்கள் மன்றத்தில் வைத்து விவாதிக்கத் தமிழக உயர்நீதிமன்ற முன்னாள் தலைமைநீதிபதி ராஜமன்னார் தலைமையில், நிபுணர் குழு அறிக்கை தயாரித்துள்ளது.

## கூட்டுப் பட்டியல்

மாநிலங்களுக்குச் சட்டமியற்ற அதிகாரங்களை வழங்கிவிட்டு அந்த அதிகாரங்களை பிடுங்கிக் கொள்ளும் உரிமைகளை மத்திய அரசுக்குத் தருவது தான் கூட்டுப் பட்டியல். இந்த நிலை கூட்டாட்சித் தத்துவத்திற்கு முற்றிலும் முரண்பட்டது.

இந்தப் பட்டியலை ஆராய்ந்து மத்திய மாநில அரசுகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பது தான் சாலச் சிறந்ததாகும். சில உதாரணங்களை எடுத்துக்கொள்வோம்.

திருமணச் சட்டம். தமிழ்நாட்டில் தங்கள் பண்பாட்டுக்கேற்றபடி சட்டம் இயற்றிக்கொள்ள மத்திய அரசின் அனுமதிவேண்டும். சுயமரியாதைத் திருமணச் சட்டம் கொண்டு வருவதற்கு மத்திய அரசோடு எந்த அளவிற்கு வாதாட நேரிட்ட தென்பதை எண்ணிப் பார்க்கின்றேன். தமிழ் நாட்டிலும் சுயமரியாதைத் திருமணங்களை விரும்பு வோர்க்குத்தான். எல்லோரையும் கட்டுப்படுத்தும் சட்டம் அல்ல என்று எடுத்துச் சொல்லியும் எதிர்ப்பைக் கண்டேன். இந்த அதிகாரம் கூட்டுப் பட்டியலில் உள்ளது. தொழிலாளர் நலம் பேணும் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் கூட்டுப் பட்டியலில்.

நமது மாநிலத்தில் உள்ள வழக்கறிஞர்கள், டாக்டர்கள் தொழில் பற்றிய அதிகாரம் மத்திய அரசுக்கு ஏன் என்பது தெரியவில்லை. அறக் கட்டளைகள் நிறுவனங்கள், சமயக் கட்டளைகள் நிறுவனங்கள், நமது வழிவழி வந்த பண்பாட்டின் அடிப்படையில் அமைத்து நடத்தப்பட வேண்டியவை

**விலை உயர்வு.**

மக்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருள்கள் உற்பத்தி, விநியோகம், வியாபாரம்,

விலைவாசிக் கட்டுப்பாடு, இவைகளில் மாநில அரசுக்கு இல்லாத அக்கறை யாருக்கு இருக்க முடியும்? தமிழகத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் வெளி மாநிலங்களிலிருந்து வரும் பொருள்கள் இவைகளின் விலைவாசி ஏற்றத்தாழ்வை உடனுக்குடன் கவனித்து நடவடிக்கை எடுக்க மத்திய அரசின் தயவு தேவைப்படுகிறது. பண்டைத் தமிழகத்தின் தொல்பொருள்களையும் சரித்திரச் சான்றுகளையும் பாதுகாத்துப் பராமரிக்க வடபுலத்தவரின் அனுமதி தேவை. தஞ்சாவூர்க் கோவிலில் இராஜராஜ மன்னரின் உருவச்சிலையை வைப்பதற்கு உள்ள முட்டுக்கட்டை இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

தமிழ் மண்ணில் உற்பத்தியாகும் மின்சாரம், வெளியாகும் செய்தித் தாள்கள் இந்தச் சாதாரண உரிமைகளிலும் ஆதிக்கம் செலுத்த வாய்ப்புள்ளது. குற்றஇயல் சட்டம், குற்றஇயல் நடைமுறை விதிகள் இவைக்கும் அனுமதி வேண்டும் தமிழ் நாட்டில் நீதி வழங்கும் மன்றங்களிலும் தலையிடும் உரிமை மத்திய அரசுக்குக் கூட்டுப்பட்டியலில் சிலவற்றைக் கண்டோம். இந்த அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தேவை என்று உணர்ந்துதான் கூட்டுப்பட்டியலில் காணப்படுகின்றன. இருந்தாலும் மத்திய அரசின் பிடிப்பு, மேலதிகாரம் இருக்க வேண்டும் என்று எண்ணியது ஏனோ? இந்தப் பட்டியலை மறுபரிசீலனை செய்து அரசமைப்புச்சட்டம் திருத்தப்பட வேண்டும்

## நோக்கம்

மத்திய அரசின் அதிகாரப்பட்டியல் கூட்டாட்சித்தத்துவத்திற்கு முரணாக ஏக இந்தியா உணர்வின் அடிப்படையில் மாநில அரசுகளைத் தங்கள் விருப்பு வெறுப்புக்கேற்றபடி ஆட்டிப் படைக்கும் அதிகாரநோக்குடன் தயாரிக்கப் பட்டுள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தொழில் வளர்ச்சி முழுமையும் மத்திய அரசிடம் உள்ளது. தமிழ் மக்களின் வேலையில்லாத் திண்டாட்டம் தீர்க்கப்பட வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வண்ணம் வளம் கூட்டும் தொழில்கள் தொடங்கிட மாநில அரசும் தனிநபர்களும் அலைந்து அல்லல்படும் காட்சிகள், தொழில் துறையில் வடபுலத்தவரின் ஆதிக்கம் இவை நித்தம் நித்தம் நாம் காணும் உண்மைகள்.

மொழி ஆதிக்கத்தைப்போல் பொருளாதார ஆதிக்கம் செலுத்த மத்திய அரசு கங்கணம் கட்டிக் கொண்டுள்ளது என்பதை, அண்மைக்காலத்தில் “எல்லோரும் இந்தி படிக்க வேண்டும், தொழில் அனுமதி வழங்கும் உரிமைகளை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க மாட்டேன்” என்று பிரதம அமைச்சர் கூறியுள்ளது மெய்ப்பிக்கின்றது. பிரதம அமைச்சரின் உயர்த்த குரலுக்குப் பணியப் போகின்றோமோ, அல்லது உரிமைகள் கோரிப் போராடப்போகின்றோமா? கிடைத்தபதவிகளில் சுகம் காணப்போகின்றோமா? அல்லது பதவிகளைத் துச்ச மென எண்ணித் தாய்த் தமிழகத்தின் தன்மானம்

சாக்க உரிமைக்குரல் எழுப்பப்போகின்றோமா? மக்கள் நம்மிடம் நிரம்ப எதிர்பார்க்கின்றார்கள்.

## அவல நிலை

தேசீய நெடுஞ்சாலைகள் என்ற பெயரில் நமது ஊர்களில் செல்லும் சாலைகளைப் பராமரித்தல். உலக நாடுகளில் வளம்கொழிக்கும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்த தமிழன் வாணிபத்தின் மூலம் கலை கலாச்சாரத்தைப் பரப்பிய தமிழினம் இன்று வெளிநாட்டுத் தொடர்புக்கு ஏங்கி நிற்கும் நிலை நமது மண்ணின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் தனிவளங்களைத் தொழில் வளர்ச்சிக்குப் பயன் படுத்த அனுமதிகோரி நிற்கும் அவலநிலை, ஏழையின் அன்றாடத்தேவை உப்பு அலைமோதும் தமிழகக் கடற்கரையோரமெல்லாம் உற்பத்தி செய்ய முடிந்த உப்பு உற்பத்திக்கும் அதிகாரம் மத்தியில்!

கலைகள் வளர்ந்த தமிழ் நாட்டில் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்க் கலை ஓங்கி வளர்ந்த நம் நாட்டில் இன்றையக் கலை வளர்க்கும் திரைப்படங்களுக்கு அனுமதிபெற வேண்டிய நிலை கல்வித் துறையில் உயர்கல்விக்கு, அறிவியல் ஆராய்ச்சிக்கு தொழில் பயிற்சிக்கு மத்திய அரசின் ஆதிக்கம், நமது வரிப்பணத்தை நாம் செலவழிக்க அதைக் கண்காணிக்கும் ஆண்டேயின் அதிகாரம் மத்தியில். விரிவடையும் தன்மையுள்ள வருவாய் மிகுதியுள்ள வரிகள் அத்தனையும் மத்திய ஆட்சியிடத்தில் மூன்று அதிகாரப் பட்டியல்களிலும் காணாத எஞ்சியுள்ள

அதிகாரம் அத்தனையும் மத்திய அரசுக்கு இவைதான் மத்திய அதிகாரப்பட்டியலில் குவிந்து கிடக்கும் நம்மீது ஆதிக்கம் செலுத்த வகை செய்யும் சுருக்கமான விவரங்கள், தேசத்தின் ஒருமைப்பாடு என்ற பெயரால் அதிகாரக் குவியல்கள், ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்புகள் மத்திய அரசுக்கு நிறைந் திருப்பதை நடுநிலைமையாளர்கள் உணர்வார்கள்.

மத்திய அரசின் ஆதிக்கம் அதிகாரங்களால் மட்டுமல்லாது நிதி வருவாய்த் துறைகளை ஏராள மாகப் பெற்றிருப்பதாலும் பெருகி நிற்கின்றது. மத்திய அரசின் வரிகள் பெருகி வருமானம் நிறைந்து மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் ஏக இந்தியா தன்மை இன்று இருக்கின்றது. இதை மாற்றி மாநிலங்களின் வருவாய்த் துறைகள் பெருகி இந்திய ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு மாநிலங் கள் சேர்ந்து கொடுக்கும் வருவாய் பெற்று நாட்டுக்கும் மத்தியக் கூட்டாட்சிதான் உண்மை யான வலிவினை இந்திய நாட்டுக்குத் தரும்.

## வேட்டு

இவ்வளவு அதிகாரங்களையும் பெற்றுக் கொண்டு, மாநிலத்தின் அதிகாரங்களையும் மேலா ளாக இருந்து கட்டுப்படுத்த ஆளுநர்கள் மத்திய அரசின் அலுவலர்களாக அமர்த்தப்பட்டிருப்பது கூட்டாட்சித் தன்மைக்கு வேட்டு வைக்கின்றது. இவர்களின் ஆடம்பரச் செலவுகளுக்கு- மத்திய அரசின் தூதுவர்களாக நம்மை ஆட்டிப்படைக்க

அமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கு மாநிலத்தின் மக்கள் பிரதிநிதிகளின் சட்டமன்றங்களின் அனுமதி பெருமலேயே நமது மக்களின் வரிப்பணத்தை விரய மாக்கும் விந்தையான அதிகாரமும் அரசமைப்புச் சட்டத்திலே தரப்பட்டுள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முக்கியமான பகுதி அவசரகால அதிகாரங்களடங்கிய பிரிவுக ளாகும். மாநில ஆட்சிகளைக் கவிழ்ப்பதற்கும், இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்துவதற்கும் ஏராளமான அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன.

1967 தேர்தலில் தி. மு. கழகம் தமிழ்நாட்டு ஆட்சியைக் கைப்பற்றும் நிலை கண்டவுடன் ராணுவ ஆட்சி வரும் என்று காமராஜர் மிரட்டியதை இங்கு, நினைவு கூறலாம். அப்போது மத்திய ஆட்சி அவரது சகாக்களிடம் இருந்த காலம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுவுடை மைக்கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்காமல் கேரள மாநிலத்தில் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டது நினைவிருக்கலாம். ஜனநாயக முறைகளை மதிக்காத வர்கள் ஆட்சிபீடம் ஏற நேரிட்டால் ராணுவ ஆட்சி வரும் என்பதற்கு இவை சான்றுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில ஆட்சியாளர் களைத் தங்கள் விருப்பப்படி ஆட்டிப் படைக்கும் சிறப்பு அதிகாரங்களும் மத்திய ஆட்சிக்குத் தரப் பட்டு உள்ளன. மாநில அரசுகளுக்கு ஆணைகள் பிறப்பிக்கும் ஆண்டே-அடிமைத்தத்துவங்களும் அர

சமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ளன. மத்திய அரசின் கொள்கைகளை மாநில அரசின் விருப்பத்திற்கு மாறாகக் கட்டாயமாகத் திணிக்கும் வாய்ப்பும் உள்ளது. உதாரணத்திற்கு ஒரு சான்று, இந்திய நாடு முழுவதும் அகில இந்திய உத்தியோகங்கள் உண்டு. ஐ. ஏ. எஸ், ஐ. பி. எஸ். போன்றவை இவை.

## தமிழ் உணர்ச்சி

இந்தக் கொள்கையைக் கல்வித்துறை, பொறியியல் துறை, மருத்துவத் துறை, காட்டிலாகா போன்ற மற்ற நிர்வாகங்களுக்கும் அமுல்படுத்த மத்திய அரசு விரும்புகின்றது. தி. மு. கழக அரசு தொடர்ந்து அந்தக் கொள்கையை எதிர்த்து வந்துள்ளது இப்போதே தமிழகத்தின் ஆட்சியில் தமிழர் அல்லாதார் அதிகம். அதிலும் தமிழின் உணர்ச்சி உள்ளோர் மிகவும் குறைவு.

மத்தியப் பொது அதிகாரிகள் தேர்வாணைக் குழு (யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன்) நடத்தும் தேர்வுகளில் தமிழரது பங்கு மிகவும் குறைந்து வருவதை ஆண்டுதோறும் காண்கிறோம்.

இந்த நிலையில் அகில இந்திய நிர்வாகத் துறைகள் விரிவுபடுத்தப்பட்டால் ஆட்சி இயந்திரத்தில் தமிழர்களைக் காண்பது அரிதாகி விடும். மாநிலத்திற்கு மாநிலம் அல்லது மாநிலங்களிலிருந்து மத்திய அரசுக்கு நிபுணர்களைத் திறமைமிகுந்தவர்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

ஆனால் நிரந்தரமாக இப்படிப்பட்ட நிர்வாகப் பிரிவுகளை உருவாக்கி அந்த அலுவலர்களைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள மத்திய அரசு விரும்புவது கூட்டாட்சித் தன்மைக்கு ஏற்புடைத்தன்று. இத்தகைய அகில இந்திய நிர்வாகப் பிரிவுகளை ஏற்படுத்தக்கூடாதென்று தமிழக அரசு பலமான எதிர்ப்புத் தெரிவித்தும் அதைப் புறக்கணித்து முடிவுகள் எடுக்கவும் அதிகாரங்கள் மத்திய அரசுக்குத் தரப்பட்டுள்ளன.

## நீதித்துறை

சுதந்திரமாக இயங்கும் நீதித்துறை என்பதின் இலக்கணம் விரிந்துகொண்டே போகின்றது நமது நாட்டில். சமுதாயத்தின் நன்மைகளை சமூகநீதி வழங்கும் தன்மைகளை எண்ணிப்பார்க்கும் நிலை குறைந்து வருகின்றது. சட்டமன்றம், நாடாளுமன்றம், இவை இயற்றும் சட்டங்களை அரசமைப்புச் சட்டத்திற்குள் நின்று விளக்கம் தரும் முடிவுகளைக் கூறும் அதிகாரம்தான் நீதித் துறைக்குத் தரப்பட்டுள்ளது. ஆனால் இன்று நிலைமை கட்டுக்கடங்காது சென்றுகொண்டிருக்கிறது. சுதந்திரமான நீதித் துறை என்ற பெயரில் நிர்வாகத் துறைக்கும் நீதித் துறைக்கும் மோதல்கள், போட்டி மனப்பான்மைகள் வளர்கின்றனவோ என்ற ஐயம் மக்களிடையே பரவிவருகின்றது. அரசமைப்புச்சட்டத்தில் நீதித் துறையின் அதிகார வரம்புகளைத் தெளிவாக வரையறுப்பது அவசியமாகும்.

இந்தியத் தலைமை நீதிமன்றம் மக்களின் எல்லாத் துறைகளிலும் தலையிட வாய்ப்புள்ளது. அங்கம் வகிக்கும் நீதிபதிகளில் தமிழகத்தின் பங்கு எங்கே என்று கேட்டு பதில் கிடைக்காது ஏங்கி நிற்கும் நிலைதான் நமக்கு. இன்றைய நாளில் ஒரு நீதிபதிகூட தமிழினத்தின் சார்பில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பலமுறை கேட்டும் பயன் கிட்டவில்லை. இத்தலைமை நீதிமன்றத்தின் ஆட்சிமொழி நாடாளுமன்றம் நினைத்தால் இந்தி மொழியாக வரலாம். இதற்கான முன்னேற்பாடுகளை மத்திய அரசு விரைந்து செய்து வருகின்றது.

ஆகவே இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் அதிகார வரம்புகள் மாநிலங்களின் சுயாட்சிக்குப் பங்கம் ஏற்படாத வகையில் முறைப்படுத்தப்பட வேண்டும். உதாரணங்கள் சில காண்போம்.

## நிலச்சட்டம்

தமிழ்நாட்டின் சமூக சூழ்நிலைக்கேற்ப நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இவைபற்றி ஆராயும் அதிகாரம் தலைமை நீதிமன்றத்திற்கு எதற்காகத் தரப்பட வேண்டும்? நமது பண்பாட்டிற்கேற்றவாறு சமுதாயச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வருகின்றோம். சுயமரியாதைத் திருமணச் சட்டம் நிறைவேற்றியுள்ளோம். தமிழர்களின் தன்மான உரிமையைப்பற்றி வடவரிடத்திலா தீர்ப்பை எதிர்பார்க்கவேண்டும்?

கல்லூரியில் இடம் கிடைக்கவேண்டுமா, கல்விக் கூடங்களை அரசின் சட்ட விதிமுறைகளுக்கு மாறுக நடத்த வேண்டுமா, இதுபோன்ற இன்னும் மிகச் சாதாரண விவகாரங்களுக்கும் டெல்லி வாழ் தலைமை நீதிமன்றம் நோக்கிச் செல்லும் அதிகாரம் எதற்காக? ஆகவே தலைமை நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இடையே எழும் பிரச்சினைகள் மாநில மத்திய அரசுகளிடையே எழும் பிரச்சினைகள், இரு மாநிலங்களின் குடிமக்களிடையே எழும் பிரச்சினைகள் இவைகளுக்குத் தீர்வுகாணும் அளவில்தான் என்று வரையறுக்கப்பட வேண்டும் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகள் மாநிலங்களின் சமப் பிரதிநிதித்துவம் பெற்றிருக்க வேண்டும்.

## வரிப்பணம்

மாநிலத்தின் உயர்நீதி மன்றம் மாநில மக்களின் வரிப்பணத்தில் நடைபெறுகின்றது. அதுவும், சட்ட மன்றத்தின் மக்கள் பிரதிநிதிகளது அனுமதி பெருமலேயே செலவு செய்யலாம். ஆனல் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு தமிழ் மண்ணிலே தமிழர்களுக்காக தமிழர்களது வரிப் பணத்தில் நடைபெறும் உயர்நீதி மன்றத்தில் நம் தாய்த் தமிழ் மணம் கமழ வேண்டுமாஞல் அதற்கும் மத்திய அரசின் அனுமதி பெறவேண்டும். பாகிஸ்தான் இராணுவ ஆட்சியினர் தங்கள் கொடுங்கோல் ஆட்சியின் பிரதிநிதியை கிழக்கு வங்கத்திற்கு

அனுப்பினர். அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க மறுத்தனர் கிழக்கு வங்க உயர்நீதிமன்ற நீதிபதிகள்.

இது வங்க மண்ணில் பிறந்த வீர வரலாறு. நம் தாய்த் தமிழகத்தில் தமிழர்களை நீதிபதிகளாகக் கொண்டு வருவதற்குத் தவியாய்த் தவிக்கின்றோம். உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு ஊதியம் உயர்த்த வேண்டுமா, வசதிகள் தரவேண்டுமா, இத்தனைக்கும் மத்திய அரசின் அனுமதி தேவை. தமிழறிந்த நீதிபதிகளை வேறு மாநிலங்களுக்கு மாற்றவும், தமிழறியாத பிற மாநில நீதிபதிகளை தமிழகத்திற்கு மாற்றவும் பூர்ண அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு. உயர்நீதிமன்றம் தவிர்த்து தமிழகத்தில் பரவிக் கிடக்கும் உரிமை இயல், குற்ற இயல் (சிவில், கிரிமினல்) நீதிமன்றங்கள் பற்றிய அதிகாரம் கூட்டுப் பட்டியலில் வருகின்றது.

நீதித்துறையின் மூலமும் மாநிலங்களை ஆட்டிப் படைக்க ஆதிக்கம் செலுத்த மத்திய அரசுக்கு அரசமைப்புச் சட்டம் அதிகாரம் அளிக்கின்றது. மாநிலத்தில் செயல்படும் உயர்நீதிமன்றம், பிற நீதிமன்றங்கள் அத்தனையும் மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும். மத்திய ஆட்சியின் மூலமோ, இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் மூலமோ மாநில நீதிமன்றங்களின்மீது ஆதிக்கம் செலுத்தும் நிலை மாற்றப்பட வேண்டும்,

## மக்கள் பணி

பொதுநல அரசு, மக்களுக்குச் செய்யவேண்டிய பணிகள் பல, கல்வி, சுகாதாரம், மருத்துவம், பஞ்ச நிவாரணம், உறுப்பிழந்தோர் நலம, காவல்துறை போன்ற பலவகைக் காரியங்களுக்கு மாநில அரசு பெருந்தொகைகளைச் செலவிட வேண்டியிருக்கிறது. ஆனால், அதற்குத் தேவையான வருமானத்தைத் தேடிக்கொள்வதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரமில்லை.

இவ்வகைச் செலவுகளுக்கு வேண்டிய பணத்திற்கு மத்திய அரசிடம் மாநில அரசுகள் கைகட்டி நிற்கவேண்டிய அவல நிலை இன்றுள்ளது. இது மாற வேண்டும்.

## மதுவிலக்கு

மதுவிலக்குக் கொள்கையை அமுல் நடத்தச் சொல்லுகிறது மத்திய அரசு. அதனால் விளையும் நஷ்டத்தை ஈடு செய்வதற்கு அது மறுக்கின்றது. இவ்வாறு பொறுப்புக்கள் பல மாநில அரசுகளுக்கு இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பண வசதி மாநிலங்களுக்கு இல்லை.

சுவிட்சர்லாந்து நாட்டில் சமுதாய நலம் கருதி 1885-ல் மது உற்பத்தி, விற்பனை இவற்றை அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி அதிகாரத்தை மத்திய அரசே மேற்கொண்டது. இதனால் மாநிலங்களுக்கு ஏற்பட்ட இழப்பை மத்திய

அரசு ஈடு செய்தது. ஆனால் டெல்லி ஆட்சியாளர்களோ, உலக உத்தமர் காந்தி அடிகளின் உயிர்த் தத்துவத்தை, இந்தியக் காங்கிரசுக் கட்சியின் மூலக் கொள்கையை, அரசமைப்புச் சட்டத்தில் கூறப் பட்டிருக்கும் அரசின் முக்கிய குறிக்கோளை - மது விலக்குக் கொள்கையை அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் அதிகாரம் பெற்று அமுல் நடத்த அஞ்சுகின்றனர்கள்.

இந்திய அரசு அமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சித் தன்மைக்கு முரணான கருத்துக்கள் நிறைந்து கிடப்பதை ஓரளவுக்கு மேலே விவரித்தோம். மாநில சுயாட்சி பெறுவது எவ்வளவு இன்றியமையாதது என்பதை மேலே காட்டிய சான்றுகள் ஓரளவுக்கு உணர்த்தும். இத்தனை அதிகாரங்களைப் பெற்றிருந்தும் மத்திய ஆட்சியினர் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளை நிறைவேற்ற அதிகாரங்கள் தேவை என்கின்றனர். அடிப்படைக் கொள்கையில் சிந்தனையில் மாற்றம் தேவை.

அதிகாரக் குவியலுக்குப் பதிலாக மாநிலங்கள் சுதந்திரமாக இயங்கிப் பொருளாதார வளர்ச்சி காண வேண்டும் என்ற கொள்கையை ஏற்றிட வேண்டும். இந்த அடிப்படை மாறுதலை ஏற்றுவிட்டால் மாநில சுயாட்சியின் தன்மை பற்றி, விவரங்கள் பற்றி முடிவு எடுத்திடல் எளிதாகும். இந்திய ஒருமைப்பாடு என்ற பெயராலே மத்திய அரசு வலிவு பெற வேண்டும் என்ற எண்ணம்தான் மேலோங்கி நிற்கின்றது. பல்வேறு இனம், மொழி, கலை, கலாச்

சாரங்கள் நிறைந்த இந்திய நாடு தனித் தன்மைகள் மாறாது ஒரு நாடாக விளங்கிட முடியும். தன்னாட்சி உரிமை பெற்ற மாநிலங்கள் இந்திய கூட்டாட்சிக்கு ஊறு தேடா மாறாக வலிவூட்டும்.

## ஒற்றுமை குலையும்

ஒரே மொழி, ஒரே பண்பாடு என்ற ஏக இந்தியா எண்ணம், இந்திய நாட்டின் ஒற்றுமையை என்றாவது ஒருநாள் சீர்குலைக்கும். இந்த உண்மைகளை உணர்ந்து சிந்தித்து முடிவுகள் எடுக்கும் பொற்காலம் விரைவில் வரவேண்டும். டெல்லி ஆட்சிபீடத்தில் அமர்ந்தவுடன் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவதாலோ, அதிகார பலத்தால் ஒற்றுமையை உருவாக்கிட முடியும் என்று எண்ணுவதாலோ, இந்திய கலாசாரம், பண்பாடு என்ற கற்பனைக் கருத்துக்களால் பிற கலாச்சாரங்களை, பண்பாடுகளை மறைத்து அழித்துவிடலாம் என்ற மாயையான எண்ணங்களை வளர்ப்பதாலோ, ஒரு மொழி ஆதிக்கத்தால் ஏக இந்தியா உருவாகிவிடும் என்ற இறுமாப்பு எண்ணத்தாலோ, பொருளாதார ஆதிக்கம் கொண்டு மாநில அரசுகளை மண்டியிட வைத்து மத்திய அரசின் வலிவைப் பெருக்கிடலாம் என்ற ஆணவப் போக்காலோ நம்மை நாமே ஏமாற்றிட முயல்வது இந்திய ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பதே யாகும்.

மாநிலங்கள் தங்கள் தங்கள் மொழி, கலை, கலாசார, பொருளாதார வளர்ச்சிகளுக்கான தன்

ஞட்சி உரிமை பெற்றுத் திகழ்ந்து, அதேபோழ்து இந்தியத் துணைக்கண்டம் வலிமைபெற்ற பூமியாக விளங்கிட ஒருங்கிணைந்து செயல்பட இந்தியக் கூட்டாட்சி மத்தியில் தேவை என்ற கொள்கையால் தான் நமது பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காண முடியும்.

இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் தி. மு. கழகம் மாநில சுயாட்சி பெறும் போராட்டத்தை அறவழியில் பேரறிஞர் அண்ணு வழியில் தொடங்கியுள்ளது. தெளிந்த சிந்தனையாளர்கள் திடமான கொள்கை வீரர்கள் இடைக்காலத்தே எதிர்நோக்கி வரும் தோல்விகள் கண்டு துவண்டு விடாமல். பதவிகளின் சுகத்தில் தோய்ந்துவிடாமல் பேரறிஞர் அண்ணு அவர்களின் இறுதி உயில் வடித்துத் தந்த மாநில சுயாட்சி நோக்கி வெற்றி முரசு கொட்டிப் புறப்படுவோம்.

—

# தமிழ் நாட்டில் தமிழை எதிர்ப்பதா?

தாய் நாட்டில் தாய்மொழிக்காகப் போராடும் விந்தை நிலை உலகிலேயே தமிழனுக்குத்தான் ஏற்பட்டிருக்கும் என்று எண்ணுகிறேன்.

தமிழ் மொழியில் பேசுவது, எழுதுவது என்பதைத் தாழ்வாகக் கருதிய காலம்—எல்லாம் தமிழ், எங்கும் தமிழ், இன்பத் தமிழ் எங்கள் உயிர் என முழக்கமிடுபவர்கள் மக்கள் வெள்ளத்தில் மிதந்து சென்றகாலம்— தாய் மொழி தமிழ் மொழி வேண்டும்; ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் "உலகில் அறிவியல் கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டாமா? தமிழில் அறிவியல் கருத்துக்களை, விஞ்ஞான நுட்பங்களைக் கொணர்வது இயலுமா" என்று ஐய வினாவெழுப்பி தமிழ்நாட்டில் குட்டையைக் குழப்பி வரும் காலம்— இப்படி பல்வேறுபட்ட கால கட்டங்கள் கருத்துக் குழப்பங்களைத் தமிழர் உள்ளத்தில் தோன்றச் செய்து வருவதை தமிழ்நாட்டில் கண்டு வருகின்றோம்.

## வெந்த புண்ணில் வேல்

அந்நியர் ஆட்சி விரட்டப்பட்டு சுதந்திர நாட்டில் கடந்த இருபத்திரண்டு ஆண்டு காலமாக மொழிப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காண

வில்லை. பயிற்சி மொழி, படிக்கின்ற மொழிகள் பற்றி இன்னும் முடிந்த முடிவில்லை. இதன் விளைவு இன்றைய இளம் தலைமுறையினர் அல்லலுக்கு ஆளாகின்றனர். எதிர்கால சமுதாயம் எப்படி உருவாக வேண்டும் என்பதே முடிவாகவில்லை.

இத்தகைய சிந்தனைகள் உள்ளத்தில் வேதனை மிகச் செய்கின்றன. வேதனை உள்ளத்தோடு வெந்து வாடும் நம்மை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் சொல்லம்பு கொண்டு தாக்கும் சிலர் தமிழ்நாட்டிலேயே உள்ளனர்.

## காழ்ப்பு

சில நாட்களுக்கு முன் (28–7–69) "இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்ற ஆங்கில நாளிதழின் தலையங்கத்தில் எழுதப்பட்ட கருத்துக்கள் இத்தன்மையினவாக இருந்தன. நான் கூறிய சில கருத்துக்களை அடிப்படையாக வைத்து காழ்ப்பு கக்கப்பட்டிருக்கின்றது. காழ்ப்புணர்ச்சி மிகுதியில் உண்மை மறைக்கப்பட்டு விட்டது. சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையைக்கூட அறிய முயலாமல் ஆத்திரத்தில் நமக்கு அறிவூட்டும் முயற்சியில் இறங்கப்பட்டுள்ளது. மத்திய கல்விக்கூடங்களின் தேவைபற்றி ஆராயத் தொடங்கி, தமிழ் பயிற்சி மொழியாவதைக் குறை கூறி, குறுகிய எண்ணமுடையவர்கள் எனக் குற்றம் சாட்டி, அகில பாரத உபதேசம் செய்து, விவரம் தெரியாதவராக்கி முடித்திருக்கிறார்கள்.

நான் சில கருத்துக்கள் கூறி பல நாட்களுக்குப் பின் இப்படிப்பட்ட விமர்சனம் திடீரென்று வருவதே வியப்பைத் தந்தது. விமர்சனத்தில் ஆத்திர உணர்ச்சி மிகுந்திருந்தது- கவலையைத் தந்தது. ஆனால் விமர்சித்தவர்கள் பற்றிய நினைவு வந்தவுடன் எதிர்பார்க்க வேண்டிய கருத்துக்கள்தாம் என அமைதி அடைந்தேன்.

## ஆங்கில மோகம்

மத்திய அரசு நடத்தும் பள்ளிகளைப்பற்றி, நடத்த எண்ணும் கல்லூரிகளைப்பற்றி நான் தெரிவித்த கருத்துக்கள் விமர்சிக்கப்பட்டுள்ளன. மத்திய கல்லூரிகள் எப்படித் தோன்றப் போகின்றன என்பதைத் தெரிந்துகொள்வதற்குள்ளாக எதிர்ப்பேன் என்பதா என வினு எழுப்பி அமைதியோடு ஆலோசிக்க அறிவுரை தரப்பட்டுள்ளது. தெரிந்துகொள்ளவில்லை என்று சொல்லிவிட்டு ஏன் வேண்டும் மத்திய கல்லூரிகள் என்பதற்கு விளக்கமும் தரப்பட்டுள்ளது வேடிக்கையாக உள்ளது.

இந்த விளக்கம் எங்களுக்குத் தெரிந்திருந்த காரணத்தினுலேதான் இந்தக் கொள்கையின் அடிப்படையையே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து வருகிறது என்பதை ஆத்திரத்தில் மறந்துவிட்டார்கள். அந்த ஆத்திரத்தில் "மாதவன் தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாகத் திணித்து வருகிறுர்" என்று எழுதப்பட்டுள்ளது

தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் அனைத்திலும் தமிழ் பயிற்சி மொழியாக ஆக்கப்படவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. இன்றைக்கு அமுல் நடத்தப்படும் பயிற்சி மொழிக் கொள்கை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்தே அரசுக் கல்லூரிகளில் இருந்து வருவதையும், தமிழக சட்டமன்றத்தில் தமிழ் பயிற்சி மொழித் திட்டம் ஐந்து ஆண்டுக் காலத்தில் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதையும் ஆங்கில மோகத்தில் மறந்துவிட்டார்கள். நான் கல்வித் துறைப் பொறுப்பேற்ற பிறகு எந்தவிதமான புதிய கொள்கையும் உருவாகவில்லை. எனினும், ஏதோ தனிப்பட்ட முறையில் நான் புகுத்துவதாகக் கற்பனை செய்து விட்டார்கள். தமிழ் நாட்டில் இப்படியும் சிலர் !

## வேதனை

பல்கலைக்கழக மான்யக் குழுபற்றி என்ன கூறி னேன் என்று அறியாமலேயே அறியாமைப் பட்டம் சூட்டிவிட்டார்கள். ஒரே இந்தியா, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே உடை, ஒரே உணவு என்று கூக் குரலிடும் இந்தி வெறியர்களின் சாயல் விமர்சனத்தில் தெரிகின்றது. தாய் நாட்டில் தாய் மொழிக்கு எதிர்ப்பா என்ற வேதனை தான்!

“இந்தியன் எக்ஸ்பிர”சின் தாக்குதல் மூலம் பயிற்சிமொழிக் கொள்கை பற்றியும், கல்வித் துறை யில் மத்திய மாநில அரசுகளின் அதிகார வரம்புகள்

பற்றியும் தமிழ் மக்களைச் சிந்திக்க வைக்க ஒரு வாய்ப்புக் கிடைத்ததில் பெருமகிழ்ச்சி.

## வெள்ளையர் ஆட்சி

நமது நாட்டில் பபிறச்சிமொழி விவாதத்திற்குரிய ஒரு பிரச்சினையாக ஆகிவிட்டதற்கு காரணம், இடைக் காலத்தில் வெள்ளையர் ஆட்சி ஏற்பட்டிருந்ததுதான் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆங்கிலம கல்வித் துறையில் ஆக்கிரமிக்க நேரிட்ட சரித்திர நிகழ்ச்சி இப்போது நமக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கின்றன.

எத்தனை மொழிகள் கற்க வேண்டும் என்பதைத் தேவையையும், அவசியத்தையும் பொறுத்து தீர்மானிக்க வேண்டும். அரசியல் ஆதிக்க உணர்வுகளின் அடிப்படையில் தீர்மானிக்கக் கூடாது. இதன் காரணமாகத்தான் மும்மொழித் திட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் நிராகரித்தது.

## மும்மொழித் திட்டம்

மும்மொழித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் தமிழ் மாநில மொழியாகக் கற்பிக்கப்பட வேண்டும்; உலகத் தொடர்புக்கு அறிவியல் கருத்துக்களைப் பெற ஆங்கிலம் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்பட வேண்டும்; தேசீய மொழியாக தொடர்பு மொழியாக இந்தி மூன்றாவது மொழியாகக் கற்க வேண்டும். இந்த மும்மொழித்திட்டம் உள்ளபூர்வமாக வடபுலத்து அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களால் ஏற்கப்படுவது உண்மையாக இருக்கு

மானால் வட மாநிலங்களில் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படும். இதன் விளைவு இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஆங்கிலம் பயில்பவர் நிறைந்து நிற்பர்.

இந்தியாவின் ஒற்றுமைக்காக தொடர்புக்காக ஒரு மொழி தேவை- தென்னகம் இந்தி மொழியை யும் வடபுலம் தென் மொழிகளில் ஒன்றையும் ஏற்க வேண்டும்—என்ற பொய்யான வாதத்தை எழுப்பு வோர், ஆங்கிலம அத்தகைய தொடர்பு மொழியாக அவர்கள் தந்த மும்மொழித் திட்டத்தின்படியே அமைந்திருப்பதை உணர மறுக்கின்றனர்.

எல்லோரும் கற்கக்கூடிய ஆங்கிலம் உங்கள் மும்மொழித் திட்டத்தில் இருக்கும்போது வேண்டு மென்றே இன்னுமொரு மொழியை ஏன் எல்லோரும் கற்க வேண்டும என விரும்புகின்றீர்கள் என்று நான் வடபுலத்தில் எழுப்பிய வினாவிற்குத் துணிந்து பதில் கூறியவர் மொரார்ஜி தேசாய் அவர்கள்தான். ஆங்கிலம் விரைவில் இந்த நாட்டிலிருந்து விரட்டப் படும் என்று அப்பட்டமாக உண்மையை ஒளியாமல் ஒப்புக்கொண்டார். ஆக மும்மொழித் திட்டம் ஓர் இடைக்காலத் திட்டம்—தென்னக மக்களை வஞ்சித்து ஏமாற்றுவதற்காகத் தரப்படும் சூழ்ச்சித் திட்டம் என்பது வெளிப்படை. வடபுலத் தலைவர்களின் உள் நோக்கம் இறுதியாக இந்த நாட்டில் இந்தி-மாநில மொழி என்ற இருமொழித் திட்டம்தான் என்பதைத் தமிழர்கள் இப்போதாவது உணர்ந்தாக வேண்டும்.

## இருமொழி

அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு ஆட்படாது, தமிழரின் நன்மை கருதி, திராவிட முன்னேற்றக் கழகம் இருமொழித் திட்டத்தை நாட்டுக்குத் தந்தது. அந்த அடிப்படையில் பயிற்சிமொழித் திட்டத்தையும் அணுகவேண்டும். முன்னரே குறிப்பிட்டபடி ஆங்கில ஆதிக்கம் நமது நாட்டில் ஏற்பட்டிருக்காவிட்டால் இந்தப் பிரச்சினைக்கே இடமிருந்திருக்காது.

கற்போர் தங்களுடைய தாய்மொழியில்தான் கல்விப் பயிற்சிப் பெறவேண்டும என்பதில் உலகில் எந்தக் கல்வி நிபுணரும் வேறுபட்ட கருத்துத் தெரிவித்ததில்லை. ஆங்கிலத்திற்காக முனைந்து வாதாடும் அறிஞர்களும் இதற்கு மாறுபட்ட கருத்தை இதுவரை தெரிவிக்கவில்லை. சரித்திர நிகழ்ச்சி தந்துவிட்ட ஆங்கில மொழி இருக்கட்டும் என்று வாதாடுகின்றுர்களே தவிர, தாய்மொழியில்— இப்போதோ எப்போதோ—கல்விப் பயிற்சி அமைய வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி கருத்துத் தெரிவிப்பதில்லை. தாய்மொழியில்தான் — தமிழ் மொழியில்தான் எல்லா மட்டங்களிலும் இன்றே நாளையோ கல்விப் பயிற்சி தரவேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுதியான கொள்கையாகும்.

## வெறி அல்ல

இது மொழிப் பற்றின் அடிப்படையிலோ அல்லது சிலர் கற்பிப்பதுபோல் மொழி வெறியின்

அடிப்படையிலோ அமைந்த கருத்தல்ல. கல்வி நிபுணர் கோத்தாரி அவர்கள் தலைமையில் இந்தியத் துணைக் கண்டத்தின் கல்வி நிபுணர்களையும் இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா, ரஷியா, பிரான்சு ஆகிய நாடுகளைச் சேர்ந்த கல்வி நிபுணர்களையும் கொண்டு மத்திய அரசு நிறுவிய கல்விக் குழுவின் அறிக்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைக்கு ஆதரவாக அமைந்துள்ளது அறிஞர் குழுவின் அறிவுரைகளைக் காண்போம்:-

"மாணவர்கள் சுலபமாக அறிவு பெறுவதற்கு பயிற்சிமொழி வகை செய்ய வேண்டுமானால், தாய் மொழிதான் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும்" என்றும், "பாட மொழியாக அயல் மொழி இருக்குமானால், மனப்பாடம் செய்வதிலேயே மாணவர்கள் கவனம் செல்லுமே ஒழிய, கருத்தைக் கிரகிப்பதில் செல்லாது" என்றும் அறிஞர் குழு அறிவித்து உள்ளது.

உலகக் கல்வி நிபுணர்களே இவ்வளவு தெளிவாக ஒப்புக்கொண்ட பிறகு பயிற்சிமொழி பற்றி ஐயங்களை எழுப்பி, சமுதாயத்தில் குறிப்பாக மாணவர்கள் உள்ளத்தில் குழப்பம் செய்ய முயற்சிப்பது நாட்டின் நலனுக்கு எதிரானது என்றே கருதுகின்றேன், இத்தகைய குற்றம் செய்பவர்களைச் சமுதாயம் கண்டிக்கத் தவறினால் எதிர்கால தமிழர் சமுதாயத்திற்கு பெரும் தீங்கு விளையும் என நம்புகிறேன். அறிஞர்கள் முடிந்த தந்த முடிவுக்குப்

பின்னும் ஐயங்களை எழுப்புவது அறிஞர்களுக்கு அழகாமோ?

## தயார்

பிறிதொரு சாரார் தாய்மொழிதான் பயிற்சி மொழியாக அமையவேண்டும் என்பதை முழுக்கவும் ஒப்புக்கொண்டு, ஆனால் இம்மாற்றம் ஏற்படும்போது மாணவர்களைப் பாதிக்காது, கல்வித்தரம் குன்றி விடாது பார்த்துக்கொள்ள வேண்டும் என விரும்பும் நல்லறிஞர்கள். இவர்களுடைய கருத்துக்களை ஏற்று மதித்து நடக்கத் தமிழக அரசு என்றைக்கும் தயா ராக இருக்கின்றது.

ஆனால் இத்தகைய கருத்துடையோர் இத் திட்டம் நிறைவேறுவதற்கு உருவான வழிமுறை களை இதுவரை தந்திலர். மெதுவாகப் போக வேண்டும், அவசரம் கூடாது, திணிக்கக் கூடாது, என்று எச்சரிக்கைகள் தருவதோடு நின்று விடுகின் றார்கள். உருப்படியாக இவர்கள் சொல்வதெல்லாம் பயிற்சி மொழி பற்றி முடிவு செய்வதை மாணவர் கள் பெற்றோர்கள் விருப்பத்திற்கு விட்டுவிடுங்கள் என்பதுதான். இதன் விளைவாகத் திட்டமிட்ட முயற்சி இல்லாமல் குழப்பம்தான் மிஞ்சும் என்பது திண்ணம். மாணவர்களை வழிப்படுத்துவதற்குப் பதிலாக அவர்கள் விருப்பம் என்று கூறி கல்லூரி களில் நிலையற்ற தன்மையை உருவாக்கலாமா?

## காலக் குறியீடு

ஆகவேதான் காலக் குறியீடு வைத்துத் திட்ட மிட்டுத் தமிழைப் பயிற்சிமொழியாக்கத் தமிழக

அரசு செயல்பட்டு வருகின்றது. இது குறித்தும் கோத்தாரி கல்விக்குழு கூறும்கருத்துக்கள் நோக்கற் பாலது. "பயிற்சி மொழி மாற்றத்தில் நீண்டகால தாமதம் ஏற்பட்டால், இந்தப் பிரச்சினை மேலும் சிக்கலானதாகவும், சிரமமானதாகவும், ஆகிவிடும்" என்று அக்குழு கூறியிருக்கிறது. இதை உணர்ந்த காரணத்தால்தான் தமிழக அரசு முதற் கட்டமாக அரசுக் கல்லூரிகளில் படிப்படியாக தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாக கொண்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் கல்லூரிகள் 94. அரசுக் கல்லூரிகள் 39. தனியார் கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழி விரும்பும் மாணவர்களுக்குத் தரப்படுகின்றது. அரசுக் கல்லூரிகளில் ஆண்டு தோறும் படிப்படியாக தமிழ் பயிற்சிமொழி வகுப்புக்களை தோற்றுவித்து வருகின்றோம். இப்படிச் செய்வது "கட்டாயத் திணிப்பு" என்று அலறுபவர்கள், இதைவிட வேறு சிறந்த திட்டம் தமிழைப் பயிற்சி மொழியாக்கத் தந்தார்களா என்றால் இல்லை. குற்றம் சொல்லி திட்டத்தை குலைக்க விரும்புகிறார்களே தவிர இவர்களுக்கு நல்லெண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை.

## வழிமுறைகள்

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறும்போது; இடைக்காலத்தில் பல இடர்கள் விளையலாம். பல பிரச்சினைகள் உருவாகலாம். பல சிக்கல்கள் ஏற்படலாம். மறுக்கவில்லை. இவைகளுக்குத் திட்டமிட்டு,

வழிமுறைகள் கண்டாக வேண்டும். உதாரணமாக, தமிழில் பாட நூல்கள் வெளிவர வேண்டும். தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக வேண்டும். இவைகளைத் திட்டமிட்டு நிறைவேற்ற முடியும். இதைத்தான் கோத்தாரி கல்விக் குழு அறிக்கை குறிப்பிடுகின்றது.

இந்த அடிப்படையில் தமிழில் பாட நூல்கள் தோன்ற, தாய்மொழியில் எல்லா மாவட்டங்களிலும் பயிற்சியளிக்கத் திட்டங்கள் தருபவர்கள் வழி நின்று நடக்க தமிழக அரசு காத்து நிற்கின்றது. ஆக்கபூர்வமான ஆலோசனைகள் தராது, குறைகள் கூறி, தமிழ் ஆக்கம் பெறுவதைத் தடுத்துவிட எண்ணுவது மடமையாகும்.

## புத்தகக் கழகம்

தமிழக அரசு புதிய பாட நூல்கள் தமிழில் வெளிவர "புத்தகக் கழகம் ஒன்று நிறுவ ஏற்பாடு செய்துள்ளது. மொழி பெயர்ப்பாக இல்லாது மொழியாக்கம் செய்யப்பட்ட நூல்கள் வெளிவர வேண்டும். மதுரை பல்கலைக் கழகத்தின் மூலமாக மாநிலத்தில் உள்ள கல்லூரி ஆசிரியப் பெருமக்களுக்கு ஆண்டு தோறும் தமிழில் கற்பிப்பதற்கான பயிற்சி நடைபெறுகின்றது. பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஒன்றுகூடி விவாதித்து, குறிப்புகளைத் தமிழில் தொகுத்து, தமிழ் பயிற்சிமொழி வகுப்புகளைச் சிறப்புடன் நடத்தத் துணைசெய்து வருகின்றார்கள்.

இத்தனை முன்னேற்பாடுகளும் செய்து வருகின்றோம். இதற்குத் துணை நிற்காவண்ணம்

தொல்லை தருவோர்கள் தமிழகத்தில் இருப்பது வெட்கப்பட வேண்டிய நிலையாகும். இத்திட்டத்திலுள்ள சிரமங்களையும் உணர்ந்து ஊக்கம் தரும் கருத்துக்கள் மேற்சொன்ன கல்விக் குழுவின் அறிக்கையில் இருப்பதைக் காணலாம். இந்த உறுதியோடு தான் தமிழ் பயிற்சி மொழித் திட்டம் நிறைவேற்றப் படுகின்றது.

## புத்துலகம்

கொள்கையில் நம்பிக்கை உள்ளவர்கள், பயன் தரும் ஆலோசனைகளைத் தரவேண்டும். தமிழ் அறிஞர்கள் பிறமொழி அறிவியல் நூல்களை தமிழ் மொழியில் கொணர முன்வர வேண்டும். மாணவர் உலகம் குழப்பவாதிகளின் கூற்றுக்களைப் புறக் கணித்து புத்துலகம் காணப் புறப்படுதல் வேண்டும். அரசியல் கட்சித் தலைவர்கள் அரசியல் வண்ணம் பூசி கொள்கைக்கு மாசு ஏற்பட வழி வகுத்துவிடக் கூடாது. எதிர்காலத் தமிழ் உலகத்தின் நன்மை மட்டும் கருதி நமது பயிற்சி மொழித் திட்டங்கள் அமைந்திடல் வேண்டும்.

தமிழ் பயிற்சி பெற்றோர்க்கு அரசு அலுவலகங் களில் அரசுத்துறை நிறுவனங்களில் வேலைக்கு முன்னுரிமை தரும் திட்டம் உருவாகி வருகின்றது. இடையிலே எதிர்ப்படும் இடுக்கண்கள் எதிர்காலத் தமிழர் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகத் தரப்படும் விலை என்று கருதி முனைந்து செயல்பட வேண்டும்.

தாய் மொழியின் இன்றியமையாமை பற்றி விரிவாகக் கூறினாலும், ஆங்கிலத்தின் அவசியத்தை

சிறிதும் குறைத்து மதிப்பிடக் கூடாது. கல்வித் துறையில் ஆங்கிலமொழிப் பயிற்சிக்கு சிறப்பான இடம் கொடுக்க வேண்டும். தமிழக அரசு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மூன்றும் வகுப்பிலிருந்தே ஆங்கிலப் பாடம் தொடங்கப் படுகின்றது. ஆங்கிலத்தில் பாடம் கற்பிக்க ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஆங்கில அறிவு மாணவர்களுக்கு அதிக அளவு ஊட்ட, மேலும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருந்தால் தான் ஆங்கில அறிவு மிகுதியாகப் பெற முடியும் என்பதை ஏற்க முடியாது. மாணவர்களுக்கு ஆங்கில அறிவு மிகுதியாகக் கிடைக்க வேறு ஆலோசனைகள் கூறினாலும் அரசு ஏற்றுச் செயல் படுத்தும்.

தமிழில் பயிற்சி பெற்றோர் வெளி மாநிலங் களுக்கு, வெளி நாடுகளுக்கு வேலைக்குச் செல்ல முடியாது என்ற வாதம் மாணவர்களையும் மயங்கச் செய்கின்றது; இந்திமொழி, அந்தந்த மாநில மொழி கள்-பிற மாநிலங்களில் ஆட்சி மொழிகளாக விரைந்து அமுல்படுத்தப்பட்டு வரும் நிலையைப் பார்க்கின்றபோது, இந்த வாதம் பொருத்தமாகத் தோன்றவில்லை. வெளி மாநிலங்களுக்குச் செல்ல விரும்புவோர் பிற மாநில மொழிகளை அல்லது இந்தி மொழியைக் கற்க வேண்டும் என்பதுதான் பொருத்த மாக இருக்க முடியும். அதேபோல மத்திய அரசு அலுவலகங்களில், நிறுவனங்களில் இந்தியின்

ஆதிக்கம் மிகுந்து வருகின்றது. இந்தப் பிரச்சினை, இந்திய நாட்டின் ஆட்சி மொழிப் பிரச்சினையோடு ஒட்டியதாகும்.

## பரிகாரம்

தமிழகத்தில் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக ஏற்றுக்கொண்டு விடுவதாலேயே இந்தப் பிரச்சினை தீர்ந்து விடாது வெளி நாடுகளுக்குச் செல்வதைப் பொறுத்தும் சிந்திக்க வேண்டும். மற்ற மாநிலங்கள், வெளிநாடுகள் செல்ல விரும்புவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆங்கில அறிவு மிகுதியாக தொடக்கப் பள்ளியிலிருந்தே தருவதன் மூலமும், இத்தகைய விருப்பமும் அதற்கேற்ற தகுதியும் உள்ளவர்களுக்கு மேலும் ஆங்கிலத்தில் தனிப் பயிற்சி கொடுப்பதன் மூலமும்தான் இதற்கு பரிகாரம் காண முடியும்.

இதைக் காரணம் காட்டி ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்பது சரியல்ல. இந்தி ஆதிக்கத்தைத் தடுக்க ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்பது சிலரது கருத்து. இந்த வாதமும் சரியல்ல என்பதை மத்திய ஆட்சியிலும் மற்ற மாநில ஆட்சிகளிலும் இந்தி பரவி வரும் வேகம் நமக்கு உணர்த்துகிறது. மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் நல்ல புலமை ஏற்பட பாடத் திட்டத்தில் மாறுதல் ஏற்படுத்தலாம். ஆனால், இதற்காக ஆங்கிலமே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதை ஏற்பது பேராபத்தாகும்.

திட்டமிட்டுச் செயல்பட்டு தமிழ் பயிற்சி மொழி யாக்கப்பட வேண்டும். அதே சமயத்தில் ஆங்கில மொழியில் மாணவர்கள் சிறந்த அறிவுபெற முயற்சி கள் மெற்கொள்ளப்பட வேண்டும். இந்த இரு மொழித் திட்டம்தான் தமிழர் சமுதாயத்துக்கு பயன் தரும்.

## அதிகாரம்

கல்வித் துறையில் மத்திய- மாநில அரசுகளின் அதிகார வரம்புகள்பற்றி ஆராயலாம். இதுபற்றி நான் தெரிவித்த கருத்துக்கள்தான் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" செய்தித் தாளுக்குச் சினமூட்டி விட்டது. தி. மு. கழகத்தின் மத்திய-மாநில அரசுகள் பற்றிய கொள்கைகளை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த் திருந்தால் இந்தக் கோபம் ஏற்பட்டிருக்காது. சிலருக்குச் சினம் ஏற்படும் என்பதற்காக நமது உயிரினும் இனிய கொள்கைகளை விட்டுவிட முடியுமா?

கல்வித் துறையில் மட்டுமல்ல, இன்னும் ஏராள மான துறைகளில் மத்திய அரசின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். உண்மையான கூட் டாட்சித் தத்துவம் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்பது, தி. மு. கழகத் தின் உயிர்க் கொள்கை. இதை மாற்றிக்கொள்ளும் நிலை கழக ஆட்சிக்கு ஏற்படவில்லை. இந்தப் பொதுக் கொள்கையின் அடிப்படையில்தான் மத்திய அரசு மாநிலங்களில் பள்ளிகளோ அல்லது கல்லூரிகளோ நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது; ஏக

இந்தியா என்ற மாயா வாதத்தின் மூலம் இந்தி ஆதிக்கத்தை விரும்புபவர்களுக்கு இது புரியாததில் வியப்பில்லை.

## முறியடிபோம்

அரசியல் சட்டப்படி கல்வித்துறை மாநில அரசின் பொறுப்பு என எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றது. ஆனல் இந்திய நாடு முழுமைக்கும் சீரான கொள்கை வகுக்க வேண்டும் என்ற வாதத்தின் அடிப்படையில் மத்திய அரசின் கல்விக் கொள்கைகளை, மொழிக் கொள்கைகளை மாநிலங்களில் புகுத்தும் முயற்சி அனுமதிக்சப் படலாமா? மாநிலங்கள் கூடி கல்வி வளர்ச்சி பற்றி கருத்துப் பரிமாற்றம் செய்வது, நல்ல கருத்துக்களை இந்திய நாடு முழுதும் செயல்படுத்துவது, இதற்கு மத்திய அரசு துணை நிற்பது- இவையெல்லாம் வரவேற்கத் தக்கவைகளே. ஆனல் ஒருமைப்பாடு என்று கூறி மத்திய அரசின் ஆதிக்கத்தை அடி பணிந்து ஏற்க வேண்டுமா?

“இந்தியன் எக்ஸ்பிரஸ்” எழுத்தாளர் சிறு பான்மையோரின் உரிமைகள், மாநிலங்களில் பணி யாற்றும் மத்திய அரசு ஊழியர்களின் வசதிகள் இவைகளோடு மாநில அரசின் அதிகார வரம்புகளை இணைத்துப் பார்த்துக் குழப்புகின்ருர். சிறுபான்மை யோரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். தேவையான வசதிகள் தரப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை. இதற்காக மத்திய அரசு பள்ளிகள், கல்லூரிகள், நடத்த வேண்டும் என்பதை ஏற்றுக்

கொள்ள முடியாது. உரிமைகள், வசதிகள் என்ற பெயராலே மாநிலங்களின் கல்வி நிர்வாகத்தில் தலையிடலாம், மாநில அரசின் கல்விக் கொள்கைக்கு எதிரான கொள்கைகளை மத்திய கல்வி நிறுவனங்கள் மூலம் புகுத்தலாம் என்பது கொல்லைப்புற வழியாக வரும் சூழ்ச்சித் திட்டங்கள். விழிப்படைந்த தமிழ் நாட்டில் இத் திட்டங்கள் முறியடிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

## ஆக்கிரமிப்பு

மத்திய அரசு அலுவலர்களுக்குப் பள்ளிகள் இயங்குகின்றன. ஆகவே, கல்லூரிகள் வேண்டும் என்பது சொத்தை வாதம். மத்திய அரசுப் பள்ளிகள் இயங்குவதே அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது. மாநில அரசின் அதிகாரத்தை ஆக்கிரமிக்கும் செயல் என்பது வெளிப்படையான உண்மை. ஒரு தவறுக்காக இன்னொரு தவறு செய்ய வேண்டும் என்பதை எப்படி ஏற்க முடியும?

மாநிலங்களில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் பிற மாநில மக்கள் பணியாற்றலாம். அவர்களுக்குக் கல்வி பயிலும் வசதிகள் தரப்படவேண்டும். இதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" விரும்புவது மத்திய அரசு ஊழியர்கள் அனைவருக்கும் ஒரே சீரான கல்வித் திட்டம் வேண்டும் என்பது. இதன் பொருள் என்ன? பல மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மத்திய அரசில் வேலைபார்க்கும் காரணத்தால்,

"ஒரு திட்டத்தின்" கீழ் கல்வி பெற வேண்டும்! அது எந்தத் திட்டம் என்பதை ஊகிப்பது சிரமமல்லவா! இந்தி மொழி ஆதிக்கத்திட்டம் என்பது வெளிப்படை.

இந்தத்திட்டம் பஞ்சாபியையும், கர்நாடகத்தாரையும் ஒன்றுபடுத்தும் என்று "எக்ஸ்பிரஸ்காரர்" புளகாங்கிதம் அடைகின்றார். மாநிலங்களில் பணியாற்றும் பிற மாநிலத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு அவரவர்கள் மொழியில் பயிற்சிபெறுவது, அவர்கள் விரும்பும் மொழிகளைக் கற்க வசதி செய்வது என்பது ஒன்று. இது மத்திய அரசு ஊழியர்களுக்கு மட்டுமல்ல. மாநிலங்களில் வாழும் எல்லா சிறுபான்மை சமுதாயத்திற்கும் பொருந்தும். ஆனால் மத்திய அரசு ஊழியர்கள் என்பதற்காக தனிக் கல்வித்திட்டம் வகுப்பது என்பது முற்றிலும் வேறான தத்துவம். இவை இரண்டையும் ஆழ்ந்து பிரித்து உணரும் ஆற்றல் தமிழ் மக்களுக்குச் உண்டு.

## திணிப்பு

தமிழக அரசின் கல்வித்திட்டத்தில் சிறுபான்மையோர், நன்மைக்காக பிற மொழிகள் கற்பதற்கும், பிற மொழிகளை பயிற்சி மொழிகளாகக் கொள்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, இந்தி, குஜராத்தி, மராட்டி, ஆங்கில மொழிகளைப் பயிற்சி மொழிகளாகக்கொண்ட பள்ளிகள் இப்போதும் தமிழ் நாட்டில் இயங்கி வருவது இதற்குச்

சான்ருகும். ஆனுல் இவைகள் எல்லாம் மாநிலக் கல்வித் துறையின் கீழ் செயல்படுகின்றன.

மத்திய ஊழியர்கள் வசதிக்காக பிற மொழிகளைப் பயிற்சி மொழிகளாகக் கொண்ட தனிப் பள்ளிகளை நடத்த விரும்பினுலும் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனுல் அப்பள்ளிகள் மாநில அரசின் கல்வித் துறையின் கீழ் இயங்க வேண்டும். மத்திய அரசின் விருப்பம் இதுவல்ல. அவர்களது கல்விக் கொள்கைகளை மாநிலங்களில் திணிப்பதுதான் மத்திய அரசின் விருப்பமாகும். இதற்கு நாமும் துணை போக வேண்டும் என்று சிலர் விரும்புகின்றனர். எப்படி இயலும்?

## புறக்கணிப்பு

இப்போது மத்திய அரசுப் பள்ளிகள் எப்படி இயங்குகின்றன எனப் பார்ப்போம். மத்திய அரசின் கல்வி அமைச்சகம் தனது மேற்பார்வையில் மத்திய அரசுப் பள்ளிகளை நடத்துகிறது. மத்தியப் பள்ளிகளின் நிர்வாகக் குழுவிற்குத் தலைவர் மத்திய அரசின் துணைக் கல்வி அமைச்சர். மத்தியப் பள்ளிகளில் கட்டாயமாகப் பயிற்றுவிக்கப்படும் மொழிகள் ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம். மத்திய அரசு ஊழியர்களின தாய்மொழி தமிழாகவோ, தெலுங்காகவோ, வங்காளியாகவோ இருக்கலாம். ஆனுல், அந்தத் தாய்மொழி பயிலுவதற்கு மத்தியப் பள்ளிகளில் வாய்புக் கிடையாது! எனினும் இந்தியையும், சமஸ்கிருதத்தையும் கட்டாயம் படிக்க வேண்டும்!

இவ்வாறு தாய்மொழியைப் புறக்கணிப்பது தான் நல்ல கல்வி முறையா? கல்வி நிபுணர் குழு வினர் தாய்மொழியில் கல்விபற்றிக் கூறியுள்ள பரிந்துரைக்கு மாறான செயலன்றோ இது!

## குறைபாடு

மேலும் இன்னுமொரு குறைபாடு உள்ளது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மத்திய அரசு ஊழியரின் பிள்ளைகள் மத்தியப் பள்ளிகளில் படித்த பிறகு தமிழ் மொழிப் பயிற்சி இல்லாது எவ்வாறு தமிழ்நாடு அரசில் வேலை பார்க்க முடியும்? மத்திய அரசு ஊழியர்களின் பிள்ளைகள் அனை வருமே மத்திய அரசிலேயே வேலை பார்க்கப் போகின்றார்களா?

மத்திய அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்கு உண்மையில் வேண்டிய கல்வி முறை எது? அவரவர்கள் தாய்மொழியில் பயிற்சியும், ஆங்கில அறிவும் அவர்களுக்கு வேண்டும். இத்தகைய பயிற்சி அளிக்கும் பள்ளிகளைத் தனியாக அமைக்க லாம். ஆனால், அவை மாநில அரசுகளால் நடத்தப் பெற வேண்டும். அதுதான் அரசமைப்புச் சட்டத் திற்கு இசைவான செயலாகும்.

## ஏற்கமுடியாது

மத்திய அரசு ஊழியர்களுக்கு பயிற்சிமொழிச் சிக்கல் ஏற்படாமல் அவரவர்கள் விரும்பும் வகையில் கல்வி கற்க, விரும்பும் மொழிகளை படிக்க, இடம் விட்டு இடம் மாறுதலாகும்போது சிரமமின்றி கல்விக்

கூடங்களில் சேர்ந்து பயில, பாடத் திட்டத்தில் பெரும் மாறுதலின்றி பயிற்சி தொடர வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தி தனிப் பள்ளிகளை மாநில அரசுக் கல்வித் துறையின் கீழ் மத்திய அரசே நடத்துவதற்கு இப்போதும் நமது கல்வித்துறை விதிமுறைகள் இடம் தருகின்றன. ஆனால் மத்திய அரசின் நோக்கம் இதுவல்லவே!

மத்திய அரசு ஊழியர்கள் பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். பல தாய்மொழிகளைக் கொண்டவர்கள். ஆகவே, அவர்களுக்குத் தங்கள் தங்கள் தாய்மொழியில் பயிற்சி கிடைக்க வேண்டும். தாய் மொழிகளைப் படிக்க வசதி வேண்டும் என்று கேட்பது முறையானதாகும். ஆனால் அவர்கள் எல்லோரும் இந்தி அல்லது ஆங்கிலத்தில் கல்விப் பயிற்சி பெறவேண்டும், மூன்று மொழிகளைக் கற்றுத் தீரவேண்டும், அதற்காக மத்திய அரசு கல்விக்கூடங்கள் வேண்டும் எனக் கேட்பது எப்படி முறையாகும்? இதை நாம் ஏற்றுக் கொள்வோமானால் மறைமுகமாக மத்திய அரசு மாநிலங்களில் தங்கள் கல்விக் கொள்கைகளைப் புகுத்துவதற்கு வழி ஏற்பட்டுவிடும். இன்னும் வெளிப்படையாகக் கூற வேண்டுமானால் மத்தியப் பள்ளிகளும், கல்லூரிகளும் இந்தி ஆதிக்கத்தின் நிலைக்கலன்களாக தமிழ் நாட்டில் வேரூன்றிவிடும். இதை எப்படி தாய்மொழிப் பற்றுள்ள தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள்?

## கொல்லைப்புற சூழ்ச்சி

மத்திய அரசு ஊழியர்களாகவோ அல்லது வேறு துறைகளிலோ பணியாற்றும் பிறமொழிக் காரர்கள் தங்கள் தங்கள் மொழிகளைக் கற்க தங்கள் தங்கள் மொழிகளில் கல்விப் பயிற்சிபெற தமிழ்நாட்டில் எல்லா வசதி வாய்ப்புகளும் தரப்பட வேண்டும்.

ஆனால் இதற்காக மத்திய அரசே பள்ளிகள், கல்லூரிகள் நடத்த அனுமதிப்பது, அவைகள் மூலமாக மத்திய அரசு தனது கல்விக் கொள்கைகளை மறைமுகமாகப்புகுத்துவது என்பது வன்மையாக எதிர்க்கப்பட வேண்டும். இந்தக் கொல்லைப்புற சூழ்ச்சித் திட்டங்கள் பகிரங்கமாக முறியடிக்கப்பட வேண்டும்.

## மான்யக் குழு

பல்கலைக் கதக மான்யக்குழு அமைப்பு பற்றியும் சிந்திக்கலாம். தி. மு. கழகத்தின் அரசியல் அமைப்பு முறைக் கொள்கைகளை முற்றிலும் உணரா தவர்கள் எங்களுடைய கருத்துக்களைக்கேட்டு ஆத்திரப் படலாம். ஆத்திரத்தில் அறியாமைப்பட்டம் சூட்டு கின்றது "இந்தியன் எக்ஸ்பிரஸ்" எதையும் எழுது வதற்கு செய்தித்தாள் இருக்கின்றது என்ற ஆணவ உணர்வு. பத்திரிகையாளர் பண்பாக இருத்தல் கூடாது. பல்கலைக்கழக மான்யக் குழுவின் குறிக் கோள்கள், செயல் திட்டங்கள் எவையாக இருந் தாலும் நான் முன்னர் குறிப்பிட்டதுபோல பொது

வான அடிப்படைக் கொள்கையிலேயே — மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் மான்யக் குழுவின் மூலமாக மத்திய அரசு தன்னுடைய கொள்கைகளைப் புகுத்தக்கூடாது என்பதிலேயே ஆட்சேபிக்கின்றோம்.

மத்திய அரசு மாநிலத்தில் செயல்படுகின்ற கல்லூரிகள், பல்கலைக் கழகங்களுக்கு மான்யக் குழுவின் மூலமாகப் பொருளுதவி செய்து வருகின்றது. இதனால் மறைமுகமாக கல்வித்துறையில் மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். இந்தப் பொருளுதவி அனைத்தும் மாநில அரசுகள் மூலமாகக் கல்லூரிகளுக்கு, பல்கலைக் கழகங்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதுதான் நான் கூறிய கருத்தாகும். மத்திய அரசின் ஆதிக்கத்தை விரும்பும் "இந்தியன் எக்ஸ்பிரசு"க்காரருக்கு இக்கருத்து கசப்பாகவிருப்பதில் வியப்பில்லை. இந்தக்கருத்து மான்யக் குழுவிற்கு எதிராகச் சொல்லப்பட்டதல்ல. மாறாக மத்திய அரசின் ஆதிக்கத்திற்கு எதிராகச் சொல்லப்பட்ட பொதுவான கொள்கை என்பதை உணர வேண்டும்.

## மத்திய அரசின் கருவி

கல்வி மான்யக் குழுவின் செயல் திட்டங்களையும் ஆராய்வது நல்லது. பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவியளிப்பதற்கென்றும், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கென்றும் நிறுவப்பட்ட கல்வி மான்

யக்குழு நேரடியாக பல்கலைக் கழகங்களுடன் மட்டுமே தொடர்புகொண்டு செயல்படுகிறது. நியாய மாகவும், சட்டப்படியும் மாநில அரசுகளின் வழியா கத்தான் அந்த நிதி உதவி அளிக்கப்பட்ட வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெறுவது இல்லை. ஏன்? பல்கலைக் கழகத்தின் கல்விக் கொள்கைகளையும் திட்டங்களையும் மத்திய அரசு தன் விருப்பம்போல் அமைப்பதற்கு கல்வி மான்யக் குழுவைக் கருவி யாகப் பயன் படுத்துகிறது.

எனவேதான், கல்வி மான்யக் குழுவின் அமைப் பும் செயல் முறையும் தாக்குதலுக்குள்ளாகின்றன. இந்த உண்மை தெரியாமல், "கல்வி மான்யக் குழு வைத் தாக்குவது அறியாமை" என்று "எக்ஸ்பிரஸ்" பத்திரிகை கூறுகிறது!

## பண உதவி

நாடாளு மன்றத்தின் 1956-ம் ஆண்டு பல்கலைக் கழக மான்யக்குழுச் சட்டத்தின் கீழ், இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அந்தச் சட்டத்தின் 12வது பிரிவுப்படி பல்கலைக் கழகங்களின் கல்வி வளர்ச்சி ஒருங்கிணைந்து வளர்ச்சி பெற, கல்வித்தரம் சீர்பட்டு வளர இந்த அமைப்பு பணியாற்ற வேண்டும். இதில் யாருக்கும் ஆட்சேபனையில்லை.

ஆனால் இவைகளைப் பெறுவது எப்படி? நாட்டில் பல பகுதிகளைச் சேர்ந்த கல்வி நிபுணர்களைக் கொண்டு ஏற்றுக்கொள்ளத்தக்க கல்விக் கொள்கை களை உருவாக்கி நம்மைப் பின்பற்றச் சொன்னால்

பொருளுண்டு. பணத்தைப் பகிர்ந்து கொடுப்பதற்கு ஒரு அமைப்பா? அதன் மூலம் கல்விக் கொள்கைகளை உருவாக்குவதா? இந்தக் குழுவின் பரிவுரைகள் செயல்படுத்தப்படாவிட்டால் 14வது பிரிவுப்படி மான்யங்கள் நிறுத்தப்படும். இதற்கு என்ன பொருள்? மான்யக் குழு தன்னாட்சி உரிமை பெற்ற அமைப்பு என்று வாதிடலாம். ஆனால் 20வது பிரிவுப்படி மத்திய அரசு ஆணையிடும் கொள்கைகளைத் தான் அடிப்படைக் கொள்கைகளாக ஏற்று மான்யக் குழு செயல்பட்டாக வேண்டும். ஆகவேதான் இந்த அமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்கிறோம்.

பண உதவியைப் பொறுத்தவரை பல துறைகளுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக் கொண்டுள்ளதைப்போல பல்கலைக் கழகக் கல்வி வளர்ச்சிக்கும் மாநிலங்கள் மூலம் திட்டங்களை நிறைவேற்றப் பணம் ஒதுக்கப்பட வேண்டும். இந்திய நாடு முழுவதும் பல்கலைக் கழகக் கல்வி சீராகவும் சிறப்பாகவும் வளர்ச்சி பெற அனைத்து இந்தியக் கல்வி நிபுணர்கள் அடங்கிய குழு அமைத்து ஆலோசனைகள் வழங்க வேண்டும். பணம் பகிர்ந்து அளிப்பதன் மூலம் கல்விக் கொள்கைகளைப் புகுத்தும் முறைகள் மாற்றப்பட வேண்டும்.

## தனித்தன்மை

தமிழகத்து அறிஞர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் நன்மை கருதி புத்துணர்ச்சியோடு சிந்திக்க வேண்டும்.

இந்திய ஒற்றுமையும் வேண்டும். தமிழரின் தனித் தன்மையும் நிலைக்க வேண்டும். நாட்டின் பிற பகுதிகளோடு, பிற நாடுகளோடு தொடர்பும் வேண்டும். அதற்கு ஆங்கில மொழி அறிவும் வேண்டும். தாய்மொழியில் பயின்று; சிந்தித்து, ஆற்றல் பெருகி அறிவியல் கருத்துக்களை அளவற்றுப் பெற்று உலகம் போற்றும் பேரறிஞர்கள் நம் தாயகத்தில் தோன்றிடவும் செய்தல் வேண்டும். தேவைக்கேற்ற மொழிகளையும் கற்க வேண்டும். ஆதிக்கம் செலுத்த வரும் ஆதிக்க மொழியை எதிர்த்து தமிழகத்தின் தன்மானமும் காத்திட வேண்டும்.

—

# கட்சி அரசியல்

நாட்டை ஆளும் கலையை அரசியல் என்கிறோம். மக்களாட்சி முறையில் மக்களே ஆட்சி நடத்துகின்றனர் என்பது கொள்கை. மக்களே நேரடியாக ஆட்சி புரிவது இயலாது. எனவே, அதற்கென தம் பிரதிநிதிகளை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். தங்கள் நல் வாழ்விற்கு எவர் பாடுபடுவார்கள் என்று மக்கள் நினைக்கின்றார்களோ அவர்களுக்கே மக்கள் தேர்தல்களில் வாக்குகளை அளிக்கின்றனர். மக்கள் நல்வாழ்விற்கென்று ஒவ்வொரு வேட்பாளரும் தனித்தனியே திட்டங்களைக் கூறி மக்களின் வாக்குகளைப் பெற முயலுவது கடினமான காரியம். எனவே, மக்களின் நலத்திற்கான திட்டங்களை அரசியல் கட்சிகள் வகுக்கின்றன. அந்தந்தக் கட்சியில் சேர்ந்த வேட்பாளர்கள் கட்சியின் பெயரால் மக்களின் வாக்குகளைக் கோருகின்றனர். ஆதலால், ஜனநாயக தேர்தல் அரசியல் கட்சிகளின் அடிப்படையில் நடைபெற வேண்டியதாகிறது.

இவ்வாறு, மக்களாட்சி முறையில் அரசியல் கட்சிகள் இன்றியமையாதவை ஆகிவிட்டன. கட்சி அரசியல் ஏற்றுத் தீர வேண்டிய ஒன்றாக ஆகிவிட்டது. நாட்டு மக்களின் ஏற்றத் தாழ்வுகள் அரசியல் கட்சிகளின் வேலைத் திட்டங்களைப் பொறுத்தே அமைகின்றன. இன்றைய உலகத்தில் மனிதனுடைய வாழ்வில் நாள் தோறும் எழுகின்ற

பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பினை ஏற்கும் சூழ்நிலை அரசியல் கட்சிகளுக்கு உருவாகி வருகின்றது. ஆட்சி சிறப்பாக நடப்பதற்கு அரசியல் கட்சிகள் கட்டுக்கோப்போடு இயங்கியாக வேண்டும். அரசின் நிர்வாக இயந்திரம் சிறந்த முறையில் செயல்பட, பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் முறையோடு நிறைவேற்றப்பட அரசியல் கட்சிகளின் துணை பூர்ணமாகக் கிடைத்தாக வேண்டும்.

இத்தனை பெரும் பொறுப்புக்களை ஏற்க வேண்டிய அரசியல் கட்சிகளின் நிலை எப்படி இருக்கின்றது.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டின் பொருளாதார மேம்பாட்டைப் பொறுத்துள்ளது. தனி மனிதர்களின் நல்வாழ்வுக்காகத் திட்டமிட்டு நாடு முன்னேறுகின்றது. எல்லா விதமான அரசியல் பொருளாதார தத்துவங்களும் இறுதியாக இந்தக் குறிக்கோளுக்காகத்தான். மக்கள் நல் வாழ்வுக் காகத்தான் செயல்படுகின்றன. ஆகவே, ஒரு நாட்டின் அரசியல் கட்சிகள், பொருளாதார முன் னேற்றம் காணும் கொள்கைகளின் அடிப்படையில் அமையுமானால்தான் நாடும், சமுதாயமும் பயன் பெறும். நமது நாட்டில் அப்படிப்பட்ட நிலையினைக் காண வாய்ப்பில்லை. சாதி, சமய உணர்ச்சிகள் பிரதிபலிப்பதும், மொழி இன வேறுபாடுகள் மிகுந் திருப்பதும், ஏற்றத்தாழ்வு நிறைந்த பொருளாதார நிலை காணப்படும் பிராந்திய வேறுபாடுகள் பரவி

யிருப்பதும், அரசியல் கட்சிகளின் வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுகின்றது.

இந்த நிலையில் நமது நாட்டு அரசியல் கட்சிகள் மக்களுக்கு பயனுள்ள வகையில் செயல்பட முடியுமா?

## தேவைக்கு அதிகம்

தேவைக்கு அதிகமான அரசியல் கட்சிகளை நாட்டில் காண்கின்றோம். இரு கட்சிகள் இயங்கும் ஜனநாயகம் காண்பதற்கு வாய்ப்பில்லை என்றே தோன்றுகின்றது. 'கட்சி' என்ற சொல் புகழிடம் என்ற பொருளில் புறநானூற்றுப் பாடலில் கையாளப் பட்டிருப்பதாக நினைவு. தனி மனிதர் களின் கொள்கை கோட்பாடுகளுக்கு, எண்ணங் களுக்கு, பெருமளவில் புகழிடம் தரும் கட்சிகளை மக்கள் நாடிச் செல்கின்றனர். ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதின் மூலமாகத்தான் கொள்கைகளைத் திட்டங்களின் மூலம் நிறைவேற்ற முடியும் என முயற்சி எடுக் கின்றது. இதற்கு பெரும்பான்மை பலம் தேவைப் படுகின்றது. கொள்கை வழி செயல்படத் தொடங்கு கின்ற கட்சிகள் பெரும்பான்மை பலம் எப்படியாவது பெறுவது என்ற முடிவுக்கு வருகின்றன. இதுதான் ஜனநாயகத் தோல்வியின் முதல் கட்டம். தேர்தல் களத்தில் வெற்றி காண்பது ஒன்றே குறிக்கோள் என்ற நிலை ஏற்படுவது ஜனநாயகத்திற்குப் பேரா பத்தை உருவாக்குகின்றது.

எப்படியோ பெரும்பான்மை பலத்தை தேட வேண்டியது எனும் துர்பாக்கிய நிலை கட்சித் தலைவர்களுக்கு நேரிடுகின்றது. நமது நாட்டில் தேர்தல் முறை பெருமளவுக்கு வெற்றி பெற்றுள்ளது உண்மைதான். ஆனால், தேர்தலில் ஈடுபடுபவர்கள், நடத்துபவர்கள் தேர்தல் வெற்றியின் தரம்பற்றி நன்கு உணர்வார்கள். அறியாமை இருளில் சிக்கித் தவிக்கின்ற, மிகச் சாதாரண கீழ்த்தர உணர்வுகளுக்கு ஆட்படுகின்ற, சிந்திக்கும் ஆற்றல் இல்லாது செயல்படுகின்ற, பண்பட்ட வாழ்வுக்கு இடமில்லாத மக்களின் நிலைமைகளை அரசியல் கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்துகின்றன. அதிகாரபலம், பணம், கவர்ச்சி யான பேச்சு, இவைகள் தாம் வெற்றி ஈட்டும் கருவி களாக விளங்குகின்றன. கட்சித்தலைமை இத்தகைய முறைகளைப் பயன் படுத்துவதில் வெற்றிபெற்றால் ஆட்சி அந்தக் கட்சியிடம் வந்து சேர்கின்றது.

## பலதரப்பட்ட உணர்ச்சிகள்

இத்தகைய துன்பச் சூழ்நிலைகளையெல்லாம் மனச் சாட்சியை மறந்து செயல்பட்டு கடக்கின்றது கட்சித்தலைமை. இதற்குப் பின்னாலாவது கொள்கை வழிக்கு திரும்ப வழி இருக்கின்றதா? பதவிகளை, அதிகாரத்தை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்ற போட்டி தொடங்குகின்றது. கட்சிக்குள்ளே பெரும் பான்மை பலம் திரட்டும் வித்தையில் வெற்றிபெற்றாக வேண்டும் பலதரப்பட்ட உணர்ச்சிகள் உள்ள வர்கள், பல தேவைகளுக்கு ஆட்பட்டவர்கள்,

அதிகார போதை உள்ளவர்கள், தான் என்ற இறுமாப்பு உடையவர்கள், ஆட்டிப்படைக்கும் எண்ணமுடையவர்கள், பதவியின் சுகம்காண விரும்புபவர்கள், இதைத்தவிர இனிமேல் இப்படியொரு வாய்ப்புக் கிடையாது என முடிவுக்கு வந்து காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள முயலுபவர்கள், சாதி, சமய, பிராந்திய உணர்ச்சிகளைத் தூண்டுபவர்கள் இன்னும் எத்தனையோ வகையினர்- இவர்களிடையே மூழ்கித் தத்தளித்துக் கரை ஏற வேண்டும். இவைகளில் வெற்றி கண்டு ஆட்சி அமைக்கின்றது அரசியல் கட்சி. இதன் பிறகாவது நிம்மதி உண்டா?

ஆட்சி பீடத்தில் அமர்ந்தவுடன் நாட்டு மக்களுக்கு அறிவித்து வந்த கொள்கைகள், திட்டங்கள், அளித்த உறுதிகள் இவைகளை நிறைவேற்ற முனைய வேண்டும் என்ற வேட்கை எழுகின்றது. ஆனால், அதிகார வேட்டையில் தோல்வியடைந்த அரசியல் கட்சிகள் திசைத்திருப்பம் செய்வதில் ஈடுபடுகின்றன. ஆட்சியில் உள்ளவர்களுக்கு எதிரான பிரச்சாரம், நாட்டில் நடக்கும் எந்த நிகழ்ச்சியையும் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் பழக்கம், மக்கள் உணர்ச்சிகளைத் தூண்டி செய்திகளை மிகைப்படுத்திய துவேஷப் பிரச்சாரத்தின் உச்சகட்டம், தனிமனிதர்களின் மீது அவதூறு பரப்பி வதந்திகளில் அரசியல் லாபம்பெறும் நோக்கம் - இவைகளை நிரம்பக் காண்கின்றோம்! நல்லாட்சி தொடங்கிய ஆட்சியாளர் பொருளாதார

நலம் காண விரும்பி கட்சித் தலைமை மாற்றுக் கட்சியினரின் பிரச்சாரத்திற்கு ஈடுகட்டுவதே தங்கள் கடமை எனக் கருதும் நிலை உருவாகின்றது. ஆட்சி அமைத்தால் அனைத்தும் நடக்கும் என எண்ணியவர்கள் கைப்பற்றிய ஆட்சியை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது, அடுத்த தேர்தலில் எப்படி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவது என்ற எண்ணங்களிலேயே மூழ்கவேண்டிய அவல நிலையை அடைகின்றனர்.

அரசு நிறைவேற்றும் திட்டங்களால், நாடு காணும் பொருளாதார வளர்ச்சியால் மக்களது உள்ளம் கவர வேண்டிய ஜனநாயகத் தத்துவம் மறைந்து, ஆட்சி இயந்திரத்தின் துணையால் பதவிகளை நிலைக்க வைக்கும் முயற்சிகளே முதல் இடம் பெறுகின்றன! நிலையான சுபிட்ச வாழ்வுக்கு, நிரந்தரமான நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு திட்டங்கள் வகுப்பதின் முக்கியத்துவம் குறைகின்றது. மாறாக, மக்களின் ஆதரவைச் சுலபமாகத் திரட்டும் வாய்ப்புக் கூறுள்ள, வாக்காளர்களின் எண்ணிக்கை பலத்தை பெருக்கிடும் சக்தியுள்ள, பலதரப்பட்ட உணர்ச்சிகள் உள்ள மக்கள் பிரிவினரை தம் கட்சியின் பக்கம் ஈர்க்கும் வாய்ப்பை உருவாக்கக்கூடிய திட்டங்களுக்கு முக்கியத்துவம் ஏற்படுகின்றது. ஜனநாயகத் தோல்வியின் மற்றொரு கட்டமாக கட்சித் தலைமை இந்தச் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

பிற கட்சிகளின் பகையை, தாக்குதல்களைச் சந்தித்து வெற்றி பெறலாம். மக்களை மகிழ்விக்கும் திட்டங்களை நிறைவேற்றலாம். ஆனால், ஏதோ ஒரு விதமான நிலையான ஆட்சியைக் கண்டவுடன் கட்சிக்குள்ளேயே பகை மூள்கின்றது. ஆட்சியைக் கைப்பற்றுவதில் ஈடுபட்ட கட்சியாளர்கள் அதிகாரப் பங்கீட்டில் பகையை வளர்க்கின்றனர். இங்கேயும் எண்ணிக்கை பலத்திற்கு வெற்றிகிட்டுகின்றது. நீதியான, நேர்மையான, உண்மையான ஆட்சியை நடத்தலாம் என முன் வந்த கட்சித் தலைமைக் கட்சியின் கட்டுக்கோப்பைப் பாதுகாப்பதே முதல் கடமையாக எண்ணத் தொடங்குகிறது. நியாயத்தின் அடிப்படையில் முடிவு எடுக்க வேண்டியவர்கள் எண்ணிக்கை பலத்தைக் கணக்கிட்டு முடிவுகள் காணும் அவல நிலைக்கு ஆளாக்கப்படுகின்றார்கள். அடுத்த தேர்தல் களம் காணும் வரை சுற்றி உள்ளவர்களைப் போற்றிப் பாதுகாத்து ஆட்சி நழுவாது பார்த்துக்கொள்ளும் சுமை ஏற்படுகின்றது. சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்புக்கொடுக்கும் நிலை, தவறுகளை ஊழல்களை கண்டும் காணாதது போல் நடிக்கும் கலை, எண்ணிக்கை பலத்தைச் சேர்க்கும் வேலை இவைகளில் கட்சித் தலைமையின் ஆற்றல் விரையமாகின்றது. யாவரையும் பகைக்காது எல்லோரது ஆதரவையும் எப்படியாவது பெற்று ஆட்சி நடத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

## தூய்மையான உள்ளம்

நாட்டுக்கு, சமுதாயத்திற்கு இன்றியமையாத

கட்சி அரசியல் மேற்கண்ட முறையில் தான் நடக்கின்றது. தூய்மையான உள்ளம் கொண்ட மக்களின் கொள்கைகள், கோட்பாடுகள், மக்கள் மன்றத்தில் வைத்த திட்டங்கள் நிறைவேற்றப் படுவதில்லை. மாறாக, கொண்ட கொள்கைகள் காற்றிலே பறக்கவிடப்படுகின்றன என வேதனை யுறுகின்றனர். கொள்கைப் பற்றுள்ள தொண்டர்கள், எந்தக்கொள்கைகளுக்காக கட்சி அமைத்து ஆட்சி கண்டனரோ அந்தக் கொள்கைகளுக்கு ஏற்படும் கதியினைக்கண்டு கண்ணீர் வடிக்கின்றனர்.

அரசியல் நடத்துவதற்காகக் கட்சிகள் என்ற நிலை, கட்சியின் வாழ்விற்காக அரசியல் என்று மாறுவதால்தான் இத்தனை கேடுகள் விளைக்கின்றன. நாட்டின் நலனைவிடக் கட்சியின் நலனே முக்கியமாகிறது. கட்சியின் நலனை விடத் தனி நபர்களின் சுயநலனே முக்கியமானது. முடிவில் மக்கள் நலன் மறக்கப்படுகிறது. மக்களாட்சி முறை தோல்வியுறுகிறது.

கட்சி அரசியலுக்குப் பின்னே கிடக்கும் இந்தப் பேருண்மைகளைக் கட்சிகளின் உண்மைத் தொண்டர்கள் உணர்தல் வேண்டும். ஜனநாயக ஆட்சி முறைக்கு அடிப்படையான பெரும்பான்மை பலம் எனும் தத்துவம் எத்தனை சீரழிவுகளுக்கு வித்திடுகின்றது என்பதைச் சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் சிந்தனையாளனாக மாறி சிந்தித்து சீர் தூக்கி செயல்படும் நிலை உருவாக வேண்டும்.

எப்படியும் பெரும்பான்மை பலத்தைச் சேர்க்கலாம் என்ற நிலை மாற வேண்டும்.

இக் குறைபாடுகள் எல்லா அரசியல் கட்சி களிலும் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றன. சில நாடுகளில் இவற்றின் காரணமாக மக்களாட்சி முறை மறைந்து போனதும் உண்டு. ஜனநாயகம் என்ற மரம் தழைத்து மக்கள் நலம் என்ற பலனை நல்க வேண்டுமெனில் அந்த மரத்துக்கு ஏற்படும் நோய்கள் அகற்றப்பட வேண்டும். சாதிப் பிளவுகள், அதிகாரமோகம், சுயநலம் என்ற இந்நோய்கள் அகற்றப்படவில்லையெனில் மரம் நல்கும் பலனுக்கு மட்டுமின்றி மரத்திற்கே ஆபத்து விளையலாம்.

தொடக்ககால ஜனநாயகத்தில் நாம் காணும் இக்குறைகள் களையப்பட வேண்டும். மனித உணர்ச்சிகளை மக்களாட்சிக்கு ஏற்றவாறு வளர்த்திட வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான மக்களாட்சி மலர முடியும.